678

தொகுதி 3.] 1924௵ மார்ச்சு௴ 1௳ [பகுதி 2

20 MAR 1924

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம, சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922ஹு பிப்ரவரி மீ 1உ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923ஹு மார்ச்சு மீ 1உ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவளத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆ[illegible] குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவரு[illegible] நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதரா

தேவராஜன் "ஆகட்டும் ஏனம்மா? அக்கிழவி எதனால் உன்னைப் பயமுறுத்திப் பணம் பறிக்கிறாள். என்ன இரகசியம் அவள் கரத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறது. அதைமட்டும் தயவுசெய்து கூறவேண்டும்" என்றான்.

தேவராஜின் தாய் "மைந்தனே! என் இரகசியம் அவளிடம் ஒன்றும் சிக்கிக்கொண்டிருக்கவில்லை. போலீஸார் அவள் யார் என்பதை யறிந்துகொண்டார்களா?" என்று சற்று ஆவலோடும் திகிலோடும் கேட்டாள்.

தேவராஜன் போலீஸார் அவளை யறிந்துகொள்ளவில்லை யென்றதே அவன் தாய் மனோநிம்மதியடைந்து புத்திரனை நோக்கி "கிடக்கட்டும், நீ கேட்ட கேள்வியைப் பற்றிக் கூறுகிறேன். அக்கிழவி முன்பு யோக்கியமான குடும்ப மாதா யிருக்கையில் நான் அவளை யறிவேன். அவளுடைய உண்மை நெடுநாள் ஒருவருக்கும் தெரியாமலிருந்தது. அவள் கூட்டங்களில் சாதாரணமாக வந்து சினேக பாவமாகவே நடந்துகொண் டிருந்தாள். வரவர அவள் மிக்க துர் நடக்கைக்காரியென்றும் அயோக்கியமானவளென்றும் தெரிந்துவிட்டது. வெளிப் படையாகவே கெட்ட வழிகளில் நடக்கத் துணிந்துவிட்டாள். அதன் பிறகு ஒவ்வொருவராய் அவளை வீட்டில் சேர்க்காமல் நிராகரித்து விட்டார்கள்.

186498

இவள் நாடோடியாய் எங்கேயோ யிருந்து இப்போது தற்செயலாக என்னைச் சந்தித்தாள். உலகமிருக்கிறதே! ஒரு காரணமுமின்றி அற்பவிஷயம் ஒருவர்க்கு அகௌரவத்தைத் யுண்டாக்கிவிடும். மனிதர் சுபாவம் பெரும்பாலும் அப்படியே. "பனையடியிலுட்கார்ந்து பாலைக்குடித்தாலும் கள் குடித்தானென்பார்கள்" என்ற பழமொழிபோல் முடியும். நீ ஒருவனை யோக்கியனென்று நம்பி சினேகம் செய்துவிட்டாய். பிறகு அவன்

கொள்ளைக்காரனென்றும் சுத்த அயோக்கியனென்றும் பகிரங்கமாகத் தெரிந்துவிட்டது. சில நாட்கள் கழித்து அவன் உன்னிடம் வந்து பழையசினேகத்தைப் பாராட்டி "என்னைச் சினேகனாக ஏற்றுக்கொள். இன்றேல் நீ என் பழைய சினேகனென்றும் எல்லா விஷயங்களிலும் என்னோடு இரகசியமாகக் கலந்திருந்தவனென்றும் யாவருக்கும் கூறி யுன்னை யவமானப்படுத்திவிடுவேன்" என்கிறான். அப்போது நீ என்ன செய்வாய்? மகனே நீயாவது ஆண் பிள்ளை; துணிகரமாகவும் தைரியமாகவும் நடந்துகொள் வாய்; நான் பெண்பிள்ளை; என்ன செய்வேன்?" என்றதே,

தேவராஜு:—"அம்மா! போதும் - போதும் - அவள் கொடிய சண்டாளியென்று தெரிந்துகொண்டேன். இந்த விவரத்தைக் கூறும்படி நான் உன்னைக் கேட்டதே தவறு; பெருந்தவறு. ஆனால் அத்துஷ்டிக்கு ஆண்டவன் அளித்த தண்டனையே யிப்படிச் சம்பவித்தது என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்" என்றான்.

தாயார்:—"ஆம்! ஆம்! அப்படியே நானும் கருதுகிறேன். இனி நாம் போஜனத்திற்குச் செல்வோம்" என்றாள்.

நேயர்களே! இப்போது நாம் இவர்களை விட்டுவிட்டு வேறு விஷயங்களைக் கவனிப்போம். சுமார் இரண்டுமணிக்கு லாயர் தம்புசாமிப்பிள்ளை தேவராஜுப்பிள்ளையின் வீட்டிலிருந்து துளசிங்கம் பிரபுவின் மாளிகைக்குப் புறப்பட்டானென்று கூறினோமல்லவா. அதன்பின் நடந்த அதிசயமான சம்பவங்களைப்பற்றி அவனைக் கவனியாது விட்டோம். இப்போது கவனிப்போம்.

தம்புசாமிப்பிள்ளை தேவராஜு வீட்டருகிலிருந்து சுமார் ஒரு மைல் தூரமே யிருக்கும் பிரபுவின் வீட்டிற்

குச் சென்றபோது அவர் தமது அறையில் உட்கார்ந்து சிற்றுண்டி யருந்திக்கொண் டிருக்கிருர். அப்பிரபுவுக்கு வயது எழுபதிருக்கும். மனைவி இறந்துபோய்ச் சில வருடங்க ளாய்விட்டன. ஒரே யொரு புத்திரன்மட்டு மிருக்கிருன். அவர் பார்வைக்கு வெறும் எலும்பும் தோலுமாக விருக்கிருர். முகம் திரைந்து கன்னங்கள் குழி விழுந்திருந்தன. ஆனல் கண்களில் மட்டும் கொள்ளிக்கட்டையைப்போன்ற தீக்ஷண்யமான பார்வையிருந்தது. அதில் கூரிய புத்தியின் பிரகாசமும் கடும் நெஞ்சத்தின் வன்மையுங்கூடத் தோன்றின. அது அவருடைய நாட்டு மாளிகை. அந்த மாளிகையிலும் நகரமாளிகையிலும் எப்போதும் வேலையாட்களும் வண்டிகள் குதிரைகளும் ஆயத்தமாக விருந்தபடியே யிருக்கும். இப்பிரபுவே நமது வயோதிகரான பராங்குசம்பிள்ளையின் பிரதிவாதி. இவரே அப்பிள்ளையின் சொத்துக்களை யெல்லாம் அபகரித்துக்கொண் டிருக்கிறவர். தம்புசாமிப்பிள்ளை பராங்குசம்பிள்ளையின் வக்கீல் என்பது நேயர்கட்குத் தெரிந்த விஷயமே. இப்போது அவன் தன் எதிரியிடம் பேசப்போயிருக்கிருன். அவர்களுடைய சம்பாஷணையைக் கவனித்தால் லாயர் தம்புசாமிப்பிள்ளையின் யோக்கியதை நன்கு விளங்கும். பிரபுவின் எதிரிலுள்ள மேஜைமேல் பலவகையுயர்ந்த சிற்றுண்டிகளும் ஒயின் சாராய வகைகளும் பழவகைகளும் வைக்கப்பட் டிருக்கின்றன.

லாயர் உள்ளே நுழைந்ததும் அவனைக்கண்ட பிரபு சந்தோஷமடைந்து “ஆ தம்புசாமிப்பிள்ளை! வாரும் வாரும்” என்று கூறிவிட்டு எதிரிலிருந்த வேலைக்காரனை நோக்கி “இவருக்கு ஒரு ஆசனம் போட்டுவிட்டு நீ வெளியில் செல்லலாம்” என்றுர். வேலையாள் சென்றதும் பிரபு லாயரை நோக்கி, என்ன சங்கதி என்றுர்.

லாயர்:—"நான் சமீபத்திலுள்ள ஒருவரைக் காணவந் தேன். இப்படியே தங்களையும் தரிசித்துக்கொண்டு போக வெண்ணி வந்தேன். நேற்று சிறைச்சாலைக் குச் சென்று பராங்குசம்பிள்ளையைக் கண்டேன்" என்றான்.

பிரபு:—"ஆ! அவனைக் கண்டீரோ? எப்படி யிருக்கிறான்? தனக்கு ஜயமே கிடைக்குமென்று தானே நம்பிக் கொண்டிருக்கிறான். அந்த நம்பிக்கையிலேயே வைத் திருக்கிறீரல்லவா, பேஷ்!" என்று கூறிக்கொண்டே புன்னகை புரிந்தார்.

அவர் நகைத்தபோது அவர் திரைந்து குழிகள் வீழ்ந் திருந்த முகம் மிக்க விகாரமாக விருந்தது. அதை யாரே னும் கவனித்தால் பிரபுவுக்கு மனவருத்த முண்டாகு மென்று லாயர் அறிவானாதலின் அங்கு சுவரில் தொங்கும் அழகிய ஒரு படத்தைப் பார்த்துக்கொண் டிருப்பவன் போல் அபிநயித்துக்கொண்டிருந்து பிறகு பிரபுவை நோக்கி,

மகாப்பிரபு, "நான் தங்கள் நன்மைக்காகவே பாடு பட வேண்டியவன். ஆயினும் என் கட்சிக்காரனுக்கு நம் பிக்கை கூறவேண்டியது நியாயமே. அடுத்த தவணையில் எப்படியும் முடிவிற்கு வந்துவிடும் என்றே கூறிக்கொண் டிருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் அடுத்த தட வையே" என்றான்.

பிரபு:—ஆம். ஆம். அதைவிடவேண்டாம். எப்போதும் அடுத்த தடவையே. நியாயமோ அநியாயமோ அதைப்பற்றி யக்கரையே யில்லை. இத்தனை வருடங் களாக நான் அனுபவித்துக்கொண்டிருக்கும் சொத் தை விட்டு விட்டு அவனுக்காகப் பிச்சைக்காரனாகி விடுவதா! ஒருகாலும் உதவாது.

லாயர்:—"இம்முறைகூட ஒரு வாக்குமூலம் அவனுக்கு அநுகூலமாகவே யெழுதிக்கொண்டுபோய்க் காட்டினேன். ஆனால் நீதிச்சபைக்களிக்கும் வாக்குமூலத்தில் அவனுக்கு முற்றும் பிரதிகூலமாகவே யிருக்கும்" என்றான்.

பிரபு:—"அதுதான் சரி. அந்தக் கிழப்பயலைச் சிறைச்சாலையிலேயே வைத்திரு. அவனுக்காக நான் ஏழையாகலாகாது. ஆனால் நான் சொன்ன சமாதான நிபந்தனையின் விஷயம் என்ன?" என்றார்.

லாயர்:—அதைப்பற்றி பக்குவமாய் அவன் லாயர் கூற வேண்டிய அக்கரையோடும் அதிகாரத்தோடும் கூறினேன். அவன் பேரன் பேத்திகளைப்பற்றிக் கூறி அவன் மனம் இரங்கச்செய்து, மூன்றில் ஒரு பாகத்தைப் பெற்றுக்கொள் என்றேன்.

பிரபு:—ஆ! அதை வேண்டுமாயின் தொலைத்து விடுகிறேன் ஒழிந்துபோகட்டும்.

லாயர்:—ஆனால் அவன் பிடிவாதமாகவிருக்கிறான். அதை வாங்கிக்கொள்வதைவிட சிறைச்சாலையிலேயே மடிவேன் என்கிறான். ஆனால் ஒரு விஷயம்தான் எனக்குப் பீதியை யுண்டாக்கிவிட்டது. அதாவது தன் வியாச்சியத்தை வேறொரு வக்கீலிட மளித்துவிடுவதாகக் கூறினான்.

பிரபு:—ஆ அப்படியா? நீ சந்தேகத்திற்கு இடமளிக்கவில்லையே?

லாயர்:—இல்லை யில்லை. பிறகு அவனைப் பக்குவமாகச் சமாதானம் செய்துகொண்டேன். எனக்கென்ன பீதியென்றால், இந்த வியாச்சியம் நீடித்துப்போனால் அந்தப் பழக்கத்தால், நான் தங்கள் லாயருக்கு

விட்டுவிட்டு இருக்கிற அனுகூலமான குறிப்புகளை யெல்லாம் அவன் கண்டுகொள்வான் என்பதே.

பிரபு:—நீ பயப்படவேண்டாம். உன்னுடைய சூக்கும மானபுத்தி எப்போதும் பலகீனமடையாது. அதைக் கூர்மை செய்யவேண்டியதற்கு என்னிடம் இதோ இந்தமருந்து தாராளமாகக் கிடைக்கும்'' என்று கூறிக்கொண்டே துரிதமாய்த் தன் பெட்டியைத் திறந்து ஒரு கத்தை நோட்டுகளை யெடுத்து லாய ரிடம் அளித்தார்.

லாயர் மிக்க வணக்கத்தோடு அதை வாங்கிக்கொண் டான். பிரபு "ஆ அக்கிழப்பயலைப் பட்டினியாய்க் கிடந்து மடியச் செய்யக் கருதினேம். நான் கூறியபடி நீ மாதம் ஐம்பது ரூபாய் கொடுத்துக்கொண்டிருந்ததை நிறுத்தி யதே யப்படித்தான் முடியுமென்று நாம் எதிர் பார்த் தோம்'' என்றார்.

லாயர்:—ஆம். ஆனல் அப்பெண், அவனுடைய பேத்தி இப்படிக் கஷ்டப்பட்டு வேலைசெய்து அவனைக் காப் பாற்றுவாளென்று நான் எதிர்பார்க்கவில்லை. அவள் எப்படி அவ்வளவு சம்பாதிக்கிருளென்று எனக்கு விளங்கவில்லை. ஆனல் அவள் யோக்கியமானவ ளாகவே யாவராலும் கருதப்படுகிருள். எனக்கு மட்டும் விளங்கவில்லை. ஏனெனில் தையல் வேலையில் அவள் எப்படி இவ்வளவு சம்பாதிப்பாளென்று எனக்கு விளங்கவில்லை. அவளுக்கு யாரேனும் நண் பராவதிருக்கவேண்டும். இன்றேல் அவள் கள்ள நாயகனை வைத்துக்கொண் டிருக்கவேண்டும்.

பிரபு:—ஆ! நாம் அதைக் கண்டுபிடித்து விட்டால் நமக்கு அது நல்ல ஆயுதமாகும். நீ யதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

லாயர்:—பிரபுவே! தங்களுக்கு அனுகூலமானது எது வேண்டுமாயினும் செய்வேன்.

பிரபு:—இருக்கட்டும். என் புத்திரனைச் சந்தித்துப் பேசி யிருக்கிறாயா?

லாயர்:—இல்லை. நான் அவரைப் பார்த்தால் வந்தனமளித் துவிட்டுப் போய் விடுவதே.

பிரபு:—இந்த வியாச்சியத்தில் நம்மிருவருக்கும் இருக்கும் இரகசிய ஒப்பந்தம் அவனுக்குத் தெரியலாகாது. ருத்திரப்பன் ஒருவிதமான மூடபுத்தி யுடையவன். இப்போதே நமது வியாஜ்ஜியம் நேர்மையாக நடத் தப்படவில்லை யென்பது அவன் அபிப்பிராயம். அவ னுக்கு, நியாயம், நேர்மை, பட்சபாதமின்மை என்ற இத்தகைய முட்டாள் வார்த்தைகளிலெல்லாம் மிக்க அபிமானம்.

லாயர்:-என் வாயால் ஒருபோதும் நமது இரகசியம் வெளி யாகாது.

பிரபு:—நான் என் உயிர்போவதாயினும் கூறமாட்டேன். அந்தப் பராங்குசம்பிள்ளையாகிய கிழப்பயல் மடிந்த பின்னும் நான் இருப்பேன். நான் இறப்பதன்முன் இவ்வியாச்சியத்தில் ஜெயமடைவேன். சில மூடர் கள் விதி விதியென்று உளறுவதுபோல் ஒரு சமயம் நான் முன்னடி யிறந்துவிட்டால், இந்தப் பையன் நியாயம் நியாயம் என்று யாவற்றையும் அவர்களுக் குக் கொடுத்துவிட்டுப் பிச்சைக்காரனாகிவிடுவான். இது ஒன்றுதான் எனக்கு வியாகூலம்.

லாயர்:—ஆயினும் இந்த வியாச்சியத்தின் விவரமாவது நட்பமாவது அவருக்குத் தெரியாதல்லவா? தாங் கள் அவ்வாறு தான் கூறி யிருக்கிறீர்கள்.

பிரபு:—"ஆம். ஆம். ஆனல் ஒரு சங்கதி. இதுகாறும்

நான் உன்னிடம் அதைப்பற்றிப் பேசவில்லே. அதாவது கொஞ்சநாட்களாக ருத்திரப்பன் இந்த வியாச்சியத்தைப் பற்றி அக்கரை யுடையவனுகி, என்னைப் பல கேள்விகள் கேட்டான். என்னுடைய லாயர்களிடம்போய் விசாரித்து இந்த வியாச்சியத்திற்கு ஆதாரமான பத்திரங்களை யெல்லாம் பார்த்திருக்கிருன். ஒருசமயம் என்னிடம் வந்து சொத்தில் பாதியைப் பராங்குசம் பிள்ளைக்குக் கொடுத்து விட்டு சமாதானம் செய்து கொள்ளலாம் என்றுன். நான் மிக்க கோபத்தோடு இந்த விஷயத்தில் நீ பிரவேசித்து என் அபிப்பிராயத்திற்கு விரோதமாக நடந்தால் நான் உன்னை வெறுத்துவிடுவேன். சபித்துவிடுவேன், என்றென்றைக்கும் என் சாபத்திற் குள்ளாவாய் என்று கடுமையாகக் கூறினேன்.

நீ எப்படியாவது அப்பெண்ணின் விஷயத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். அது நமக்குச்சரியான ஆயுதம். அதனல் அக்கிழப்பயலே யடியோ டொழித்துவிடலாம்.'' என்று கூறினர். லாயர் உடனே விடைபெற்றுக்கொண்டு சென்றுன்.

நேயர்களுக்கு மேற்கண்ட விஷயங்கள் அவ்வளவாக நமது கதைக்கு அவசியமானவையாகப் புலப்படா. ஆயினும் ருத்திரப்பன் விஷயத்தை நினைவில்வைக்கக் கோருகிறோம். இத்தகைய பரம துஷ்டர்கள் எண்ணத்திற்கு அழிவை யுண்டாக்கக் கருணாநிதியாகிய பகவான் எவ்வாறு வேலைசெய்கிருனென்பதும் அவனது அளவிடற்கரிய சாமார்த்தியமும் கருணையும், நீதியும் அப்போது நன்கு விளங்கும்.

18-வது அத்தியாயம்.

நிரபராதிக்கு நேரும் ஆபத்து.

பராங்குசம் பிள்ளை யிருக்கும் சிறைச்சாலைக்குச்சமீபத்திலேயே ஆலமர வீதியிருக்கிறது. அவ்வீதியிலுள்ள ஒரு வீட்டின் இரண்டாவது மாடியில் நாணயமாகவும் சுத்தமாகவும் அலங்காரம் செய்யப்பட்ட இரண்டு அறைக ளிருக்கின்றன. அந்த அறைகளில்தான் நமது உண்ணுமுலை வசிப்பது. முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்ததினம் மாலை நாலரைமணிக்கு உண்ணுமுலை வீட்டிற்குச் சென்றாள். அவ்வீட்டின் சொந்தக்காரியாகிய சுந்தரம்மாள் உண்ணுமுலையின் சங்கதிகளையும், அவள் குணங்களையும் நன்கறிந்தவள்.

அம்மாது மிக்க யோக்கியமானவள். அவளுக்கு ரொக்கவருமானம் கொஞ்சமேவருகிறது. அதோடு அந்த வீட்டின் சொல்பவாடகையால் அவள் ஜீவித்துக்கொண்டு கௌரவமாகக் காலத்தைக் கழிக்கிறாள். அவள் யோக்கியதையை யறிந்தே யாரையும் வீட்டில் வசிக்கவிடுவாள். உண்ணுமுலைமேல் அவள் நடக்கையில் அவளுக்கு மிக்க நேசமுண்டாய் விட்டது. உண்ணுமுலை இரண்டு அறைகளை விட்டுவிட்டு இன்னும் குறைந்த வாடகையில் ஒரு அறையகப்படு மிடத்திற்குக்கூடப் போய்விடுவாள். ஆனால் சுந்தரம்மாளே அவளைப்பிரிய மனமின்றி வெளியில் போகவேண்டா மென்று தடுத்தாள்.

உண்ணுமுலை கதவைத் தட்டியபோது வேலைக்காரி அங்கில்லாத படியால் சுந்தரம்மாளே போய்க் கதவைத் திறந்தாள். அப்போது உண்ணுமுலை ஏதோ மனத் துடிப் புடையவளாகக் காணப்பட்டாள். சுந்தரம்மாள் "அய்யோ பாபம், இவளுக்கு ஏதோ புதுதுயரம் ஏற்

பட்டதுபோலும்" என்று கருதி "ஏனம்மா! வியாகூல மான சங்கதியொன்று மில்லையே?" என்றாள். உண்ணு முலை "ஒன்றும் விசேஷமில்லை" என்றுகூறிக்கொண்டே அங்கு நிற்காமல் அவளைக் கடந்து கையிலிருந்த பெட்டி யோடு நேரே தன் அறைகளுக்குச் சென்றாள்.

சுந்தரம்மாள் கதவை மூடிக்கொண்டு "இவள் பன் முறை துயரத்தோடு வந்ததை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இம்மாதிரி கலவரத்தோடு இதுகாறும் வந்ததில்லை. என்னசங்கதியோ தெரியவில்லை" என்று சிந்தித்தாள். பிறகு தன் அறைக்குச் சென்று உட்கார்ந்தவள் அப்ப டியே யுறங்கிவிட்டாள்.

சுமார் ஒரு மணி நேரங்கழித்து யாரோ அதிகாரத் தோடு பலமாகக் கதவைத் தட்டும் சத்தம்கேட்டது. வேலைக்காரி சென்று கதவைத்திறந்தாள். "உண்ணுமுலை யென்பவள் வேண்டும்" என்று ஒரு உரத்தசத்தம் கேட் டது. உடனே இருவர் படிகளில் ஏறிவரும் சத்தம்கேட் டது - வேலைக்காரி வந்தவர்களைக் கண்டு "உண்ணுமுலைக் காகவா வந்தீர்கள் - சேசே..." என்று ஆத்திரத்தோடு என்னவோ கூறமுயன்றாள். வந்தவர்கள் போலீஸ்காரர் கள். அவர்களில் ஒருவன் "உஸ் - ஒன்றும் பேசாதே பேசாதே, அவள் அறையைக் காட்டு" என்றான்.

இவர்கள் உண்ணுமுலை யிருக்கும் அறைக்குச்சென்ற போது அவள் முகவாட்டத்தோடு உட்கார்ந்திருந்தாள். பக்கத்திலிருந்த மேஜைமேல் கிழவி அணிந்திருந்த மோ திரம் இருந்தது. போலீஸாரில் ஒருவன் அவளை நோக்கி "சின்னம்மாள் என்றவளைக் கொன்றதற்காக உன்னைக் கைது செய்கிறோம்" என்றான். இதைக்கேட்டதே உண்ணு முலை வீறிட்டலறி "அய்யோ! கடவுளறிய நான் அவ ளைக்கொல்லவில்லை. நான் நிரபராதி" என்றாள். அவள்

முகத்தில் மிக்க திகிலும் பயங்கரமுமான விகாரமுண்டா யிற்று; நாக்குழறியது. அதற்குள் போலீஸாரில் ஒருவன் இதோ அந்தமோதிரம், அதுவே ; சுற்றிலும் முத்துகள்; மத்தியில் சிகப்புக்கல்'' என்று அதை யெடுத்தான்.

அதைக்கண்ட உண்ணுமுலை கோவென்றலறி "அய் யோ! அதைக் கொடுத்து விடுங்கள். அதற்காக நான் அனுபவித்த மனோவேதனை கடவுளே அறிவார்'' என் ருள். போலீஸார் "ஆ! நாங்களும் அறிவோம்-அறிந்து, அதற்கே வந்தோம்; பேசாமல் எழுந்திவா'' என்ருர்கள்.

பரிதாபமான அக்கன்னிகை "அய்யோ கடவுளே! நான் நிரபராதி'' என்று கூவிக்கொண்டே மூர்ச்சையாக விழுந்துவிட்டாள். இக்கோர சம்பவத்தைச் சுருக்கமாகக் கூறி விடுகிறோம். போலீஸார் மூர்ச்சை யடைந்திருந்த அக்கன்னிகையை வண்டியிலேற்றிச் சிறைச் சாலைக்குக் கொண்டுபோனார்கள். செல்லும்போது வேலைக்காரியிடம் இன்ன குற்றத்திற்காகப் பிடித்துப் போகிறோம் என்று கூறிச்சென்ருர்கள்.

வீட்டுக் காரியாகிய சுந்தரம்மாள் வேலைக்காரியின் மூலமாகச் சங்கதியைக் கேட்டதும் "அய்யோ கட வுளே! உண்ணுமுலையா கொலையாளி'' என்று அலறி விழுந்து மூர்ச்சை யடைந்தாள். வேலைக்காரி உடனே அவளுக்கு உபசாரம் செய்து மூர்ச்சைதெளிவித்தபோது அம்மாது, "இதென்ன அநியாயம், அவளா கொலைசெய் பவள். அதைவிட நானே கொலைசெய்தேன் எனலாம். இதுபொய் -போலீஸார் சுத்த முட்டாள்தனமாகத் தவ ருய் இவளைப் பிடித்துக்கொண்டு போயிருக்கிருர்கள். ஆயினும் நமது கௌரவமான வீட்டிற்கு இது ஒருமானக் கேடாகுமே'' என்ருள்.

அதற்குள் வேலைக்காரி "அம்மா! பாபம் அவள்

பாட்டன் முன்னமே பெருந்துயரில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறன். இச்சங்கதியைக் கேட்டால் அவன் பிராணனே போய்விடும் '' என்ருள்.

இம்மொழிகளைக் கேட்டதே சுபாவமாக நற்குணமுடைய அம்மாதிற்கு மனங் கரைந்துவிட்டது. " ஆ! நல்லசமயத்தில் நினைப்பூட்டினுய், அவள் குற்றவாளியாக விருந்தாலே அக்கிழவரை நாம் ஆதரிக்கவேண்டும், அவள் நிரபராதியாக விருக்கும்போது இன்னும் அவசியமாக அவரை நாம் கவனிக்க வேண்டியது நமது கடமை- யாரேனும் முரட்டுத்தனமாக அக்கிழவரிடம் திடீரென்று இக்கோர சமாசாரத்தைக் கூறிவிடாமுன் நான் சென்று பக்குவமாக அவருக்குக்கூறி அவர் மனதைத் தேற்ற வேண்டும் '' என்ருள்.

சுந்தரம்மாள் உடனே ஒருகூடையில் சிற்றுண்டியும் ஒருபுட்டி ஒயினும் ஒருபுட்டி சாராயமும் கொஞ்சம்பழவர்க்கங்களும் எடுத்துக்கொண்டு சிறைச்சாலையை நோக்கிச்சென்ருள். சிறைச்சாலை மூடும் வேளை யாய்விட்டதால் அச்சமயம் யாரையும் உள்ளே விடமாட்டார்கள். ஆனல் சுந்தரம்மாள் அப்போதைக் கப்போது, உண்ணுமுலையோடுகூடக் கிழவனைக்காண அங்கு சென்றிருப்பதாலும், ஒவ்வொரு சமயங்களில் தான் தனியேசென்று தன் சொந்தச்செலவில் கிழவனுக்கு ஏதேனும் வாங்கிக்கொண்டுபோய்க்கொடுப்ப துண்டாதலாலும் சிறைச்சாலைக் காவலர்கள் அவளை யறிவார்கள். ஆகையால் தான் வந்தகாரணத்தை யம்மாது கூறியதே அதைக்கேட்ட காவலன் மிக்க வியப்பும் கோபமும் துயரமுமடைந்து, " என்ன! சிறுவயது முதல் நாங்கள் பார்த்துக்கொண் டிருக்கும் அக்குழந்தையா கொலையாளி? எந்தத் துரோகிகள் என்ன கெட்டஎண்ணத்தோடு அவள்மேல் இத்தகைய அபாண்

டத்தைக் கூறுகிறார்கள். ஆயினும் அம்மா நீ இவ்வளவு தயவோடு முன்னடி பக்குவமாக இவ் வயோதிகருக்கு இச்சங்கதியைக் கூற வந்ததற்காக உனக்கு மிக்க வந்தன மளிக்கிறேன். நீ உள்ளேவந்து தாழ்வாரத்தில் இரு. அவரை யழைத்துவருகிறேன்" என்று கூறிச் சுந்தரம் மாளை யழைத்துக் கொண்டுபோய்த் தாழ்வாரத்தில் உட்காரவைத்து விட்டு உள்ளே சென்றான்.

சற்று நேரத்திற்குள் பராங்குசம் பிள்ளை யங்குவந்தார். கிழவி இதற்கு முன்பு இரண்டொரு முறை அம்மா திரி தனியாகவந்து அவருக்குத் தன்னாலியன்ற உதவி செய்து சென்றிருக்கிறாள். ஆகையால் இப்போதும், அப்படித்தான் வந்தாள் என்று கிழவர் கருதிக்கொண்டாராதலால், முகமலர்ச்சியோடு வந்து அம்மாதுக்கு நல்வரவு கூறி என் விஷயத்தில் இத்தகைய நட்பு பாராட்டுவதற்காக மிக்க நன்றியுடையவனாகவிருக்கிறேன். கடவுள்தயவால் என் நன்றியைக்காட்டும் காலம் சமீபத்திலேயே வந்துவிட்டது. இத்தவணையில் என் வியாஜ்ஜியம் எப்படியும் முடிவிற்கு வந்துவிடும். ஆ! அப்போது எனக்காக இவ்வளவு கஷ்டப்படும் என் உண்ணாமுலை மிக்க செல்வவந்தியாக வாழ்வாள். சொந்தவண்டி வைத்துக் கொள்வாள்." என்றதே,

அம்மாது "ஆயினும் செல்வத்தால் மட்டுமே சுகமில்லை. நினையாத ஆபத்துகள் நேரிடலாகும்" என்றாள்.

கிழவர்:—உண்மையே. இவ்வளவு காலமாகக் கடவுள் எங்களுக்குத் துன்பத்தையே யளித்து வந்தார். இனி யவ்வாறு செய்யமாட்டார்.

சுந்தரம்மாள்:—"அய்யோ அய்யா! உண்ணாமுலையின் ஆபத்து..." என்றதே கிழவன் பேரிடி விழுந்த வனாகி "அய்யோ என் கண்மணிக்கென்ன? அவளுக்குத் தேகசுகம் எப்படியிருக்கிறது?" என்றான்.

அம்மாது பக்குவமாகச் சங்கதியைக் கூறினள். அதைக்கேட்டதே அவ்வயோதிகன் "என்உண்ணுமுலையா கொலை செய்தாள் ? ஆ ! இது என்னை யழிப்பதற்கு என் விரோதிகள் செய்த வேலையேயாகும். அந்தோ ! அவளா கொலை செய்வாள் ! என் உயிருக்கு ஆதரணையாக விருந்த அவள்மேல் இப்படி யபாண்டம் கூறி விட்டார்களே ! எனக்கு எவ்வளவோ ஆதரணையாகவும் ஆறுதல் கூறிக் கொண்டு மிருந்தாளே. இப்போது அவளே சிறைச் சாலையி லடைக்கப்பட்டாளே. அய்யோ ! நான் போய் அவளுக்குத் தேறுதல் கூறவேண்டும். அவள் நிரபராதி. அதற்குத் தடையேயில்லை. ஆம் நான் உடனே போக வேண்டும். என் கண்மணியைக் காணவேண்டும்..." என்றபோது,

சுந்தரம்மாள்:—தாங்கள் ஆத்திரப்படவேண்டாம். நிர பராதிகளைக் கடவுள் காப்பாற்றுவார். தாங்கள் சிறைச்சாலையைவிட்டு வெளியில் போகக்கூடாதே.

கிழவர்:—"ஆம் ஆம். நான் அதை மறந்துவிட்டேன். அய்யோ ! அவள் ஒரு சிறைச்சாலையில், நான் ஒரு சிறைச்சாலையில், இல்லையில்லை நான் அவளிடம் போயே தீருவேன்" என்று கூறிக்கொண்டே கத வைத் திறந்துகொண்டு வெளியில் செல்லப்போனன்.

சுந்தரம்மாள் "ஒகோ இவனுக்குப் புத்தி சபலித்து விடுமோவெனப் பயந்து சாந்தமாய், தாங்கள் கொஞ் சம் பொறுக்கவேண்டும். உண்ணுமுலைக்கு வேண்டிய சகாயமனைத்தும் நான் செய்கிறேன். தங்களுக்கு அதைப் பற்றிக் கவலைவேண்டாம். தாங்கள் வெளியில் செல்ல முடியாதென்பதை மறவாதீர்கள். பொறுமையாக விருங் கள்" என்றுள்.

கிழவன் உடனே மிக்க துயரத்தோடு பிரலாபிக்கத் தொடங்கினன். சுந்தரம்மாள் என்ன தேறுதல் கூறியும் சாந்தமடையவில்லை. கடைசியில் "அய்யோ என் கண் மணியே" என்று வீறிட்டலறிப் பூமியிற் சவம்போல் விழுந்துவிட்டான். சுந்தரம்மாள் ஓவென்று கூவியதும் காவலர்கள் வந்து கிழவரைச் சிறைச்சாலையிலுள்ள வைத்தியசாலைக்கு எடுத்துக்கொண்டு சென்றார்கள். சுந்தரம்மாள் பிரலாபித்ததற்கு சிறைச்சாலைக் காவலாளர், "அம்மா! நீ வியாகூலப்படவேண்டாம். அவரை நாங்கள் ஜாக்கிரதையாய்க் கவனித்துக்கொள்வோம். நீ அதைப்பற்றிக் கவலை வைத்துக்கொள்ள வேண்டாம்" என்றார்கள்.

சுந்தரம்மாள் அங்கிருந்து புறப்பட்டதும் உண்ணாமுலையைக்கண்டு தேறுதல் கூறக்கருதி அவள் அடைக்கப்பட்டிருக்கும் போலீஸ் சாவடிக்குச் சென்றாள். அங்கிருந்த இன்ஸ்பெக்டர் இப்போது குற்றவாளியைக் காண முடியாதென்று கூறி "அம்மா! அக்கன்னிகைக்கு இச் சந்தர்ப்பத்தில் நாங்கள் எவ்வளவு சௌகரியம் அளிக்கக் கூடுமோ அவ்வளவும் அளிக்கிறோம். அதைப்பற்றி நீங்கள் ஐயப்படவேண்டாம்" என்றான்.

சுந்தரம்மாள் "ஏனையா! அவள் குற்றவாளியென்று நீர் கருதுகிறீரா?" என்றாள்.

இன்ஸ்பெக்டர்:—"அம்மா! இப்போது அதைப்பற்றிக் கூறமுடியாது. நாளைக்கு நியாயாதிபதியிடம் பிரதம விசாரணை. அப்போதுதான் விஷயங்கள் வெளியாகும்." என்றான்.

சுந்தரம்மாள் சற்று முட்டாள்தனமாக "ஆ! அப்போதே ஏதோ கெடுதி நேர்ந்திருக்கிறதென்று தோன்றி

யது. நான் கதவைத் திறந்தபோது அவள் முகத்தில் மிக்க கலக்கமான விகாரம் இருந்தது.'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் "ஆ! உண்மையா? அப்போது என்ன வேளை யம்மா?'' என்றான்.

அப்போதுதான் சுந்தரம்மாளுக்குத் தான் முட்டாள் தனமாகக் கூறியது தன் சிநேகிக்கே துன்பமாக முடிந்ததென்று தோன்றியது. அவள் மிக்க வியாகூலமடைந்து "அய்யா! என் மனம் பெருங் கலக்கத்திலிருக்கிறது. நான் என்ன சொன்னேனே எனக்கே தெரியவில்லை. என்ன மணியோ ஏதோ! கடவுளே! கடவுளே!'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் "அம்மா! உன் சாட்சியம் முக்கியமானது. நாளைக்கு நீ குற்ற விசாரணை ஸ்தலத்திற்கு வரவேண்டும். உனக்கு சம்மன் அனுப்பப்படும்'' என்றான்.

சுந்தரம்மாள் "அய்யோ கடவுளே! நான் என்ன மூடத்தனம் செய்துவிட்டேன்.'' என்று தனக்குள் மிக்க வியாகூலப்பட்டுக்கொண்டு, இன்ஸ்பெக்டரை நோக்கி, "அய்யா! தயவுசெய்து அப்பெண்ணுக்கு ஒரு சங்கதி கூறவேண்டும். அதாவது "நீ வசிக்கும் வீட்டுக்காரியாகிய சுந்தரம்மாள் உன்னைக்காண வந்திருந்தாள். உன் பாட்டனைக்கண்டு மெதுவாய்ச் சங்கதியைக்கூறி தேறுதலளித்ததாகக் கூறச் சொன்னாள் என்று கூறவேண்டும்'' என்றாள்.

இன்ஸ்பெக்டர் அவ்வாறே சொல்வதாக வாக்களித்த பின் சுந்தரம்மாள் அங்கிருந்து தன் வீட்டிற்குத் திரும்பினாள். வழி முழுதும் தான் மூடத்தனமாகக் கூறிவிட்ட வார்த்தைகளால் அவள் மிக்க மனோவேதனை யடைந்து கொண்டே சென்றாள்.

இதற்கிடையில் உண்ணாமுலையின் நிலைமை சொல்லத் தரமல்ல. அவள் மூர்ச்சை யடைந்திருந்தபடியால், தான் சிறையில் கொண்டுவந்து வைக்கப்படுவது அவளுக்குத் தெரியாது. ஸ்மரணை வந்தபின்பே தான் இருக்குமிட மின்னதென்று தெரிந்தது. முதலில் “அய்யோ கடவுளே! நிரபராதியாகிய எனக்கு இத்தகைய ஆபத்தை யேன் உண்டாக்கினீரோ!” என்று கதறினாள். ஆனால் அடுத்த வினாடியே, “அய்யோ நமது பாட்டன் இதை யறிந்தால் என்ன வியாகூலமடைவாரோ!” என்று பெருந்துயர மடைந்தாள். ஆனால் இன்ஸ்பெக்டர் வந்து கூறிய சங்கதியைக் கேட்டபின், ஆ! நமது பாட்டனார் முன்னமே யிதை யறிந்து மனத்தேறுதலடைந்திருக்கிறார்” என்று சற்று நிம்மதியடைந்தாள். சுந்தரம்மாள், இவளுக்குக் கிழவன் நிலைமையைக் கூறினால் மிக்க வியாகூலமடைவாள் என்றே மறைத்து இம்மாதிரி கூறினாள்.

உண்ணாமுலையின் மனோ நிலைமை யிவ்வாறென்று கூற முடியாது. எதையும் வாய் திறந்து கூற அவளால் முடியவில்லை. அந்த மோதிரத்தைப்பற்றி அவள்முன் பிரஸ்தாபிக்கும்போ தெல்லாம் அவள் முகத்தில் மிக்க தீட்சணியமான ஒரு மாறுதல் உண்டாகிறது. அச்சமயம் யாரேனும் சூக்கும அறிவுடையோர் அவளைக் கவனித்தால் அவள் மனதில் ஏதோ சமாசாரம் வைத்துக்கொண்டிருக்கிறாளென்றும், அதைக்கூற ஒவ்வொரு சமயம் துணிவுடன் வாய் திறக்கப்போகிறாள், ஆனால் மறுபடி பற்களைக் கடித்துக்கொண்டு பேசாம லிருந்துவிடுகிறாளென்றும் தெரிந்து கொள்வார்கள்.

போலீஸார் கொலை யுண்டவள் சின்னம்மாளென்று அறிந்துகொண்டார்கள். எவ்வாறெனின் சவம் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டு அவ்வதந்தி

-600 008

186498

எங்கும் பரவவே, அக்கிழவி வசித்துக்கொண் டிருந்த வீட்டுக்காரி ஸ்டேஷனுக்கு வந்து அக்கிழவியின் பெயரைக் கூறினள். போலீஸார் உடனே சுக விலாசத்திற்குச்சென்று இராஜம்மாளை மெதுவாக விசாரித்து உண்ணுமுலை யணிந்திருந்த உடை முதலியவற்றின் அடையாளங்களையும் அவள் வாசஸ்தலத்தையும் அறிந்துகொண்டு கடைசியில் திரும்பும்போது சங்கதியைக் கூறினர்கள். இராஜம்மாளும் அதைக்கேட்டதும் "அந்தோ! அந்தப் பெண்ணு கொலை செய்திருப்பாள். இல்லையில்லை" என்று ஆத்திரத்தோடு கூறிக்கொண் டிருக்கையிலேயே போலீஸ்காரர் திரும்பி வந்துவிட்டார்கள்.

ஞானம்பாள் சங்கதியைக்கேட்டதும் மிக்க வியப்பும், துயரமும் அடைந்தாள். அவளும் உண்ணுமுலை கொலை செய்திருப்பாளென்று எள்ளளவும் நம்பவில்லை. சுகவிலாசத்திலிருந்து திரும்பிய பிறகு போலீஸார் நேராக உண்ணுமுலையின் வாசஸ்தலத்திற்குச்சென்று அவளைக் கைது செய்தார்கள். சின்னம்மாள் வசித்துக் கொண்டிருந்த விடமும் அவள் பெயர் முதலியவைகளும் தெரிய வந்ததே அவள் தக்க யோக்கியதையுடையவளல்ல வென்று போலீஸார் அறிந்தார்கள்.

19-வது அத்தியாயம்.

குற்ற விசாரணை.

மறுநாள் கொலை நடந்த சங்கதி நகரெங்கும் பரவி விட்டது. தினசரிப் பத்திரிகையில் பின்கண்ட விஷயம் பிரசுரிக்கப்பட் டிருந்தது:—

"இக்கொடூரமும் மர்மமுமான கொலை நேற்று மாலை சுமார் மூன்று மணிக்கும் நான்கு மணிக்கு மிடையில் நடந்திருக்கிறது. நகரத்தின் மேற்பாலுள்ள சின்ன

தோட்டத்தில் ஒரு நெருக்கமான சந்தில் இக்கொலை நடந்தது. இக்கொலையைச் செய்தவள் உண்ணுமுலை யென்ற ஒரு கன்னிகை. கொலை செய்யப்பட்டவள் சின்னம்மாள் என்ற ஒரு கிழவி. அவளுக்கு வயது எழுபதிருக்கும். அக்கன்னிகை தையல்வேலை செய்பவள். இதுகாறும் அவள் மிக்க யோக்கியவதியாகவும் எள்ளளவுகூடக் குற்றமில்லாத நடக்கை யுடையவளாகவுமே யிருப்பதாகத் தெரிகிறது. கொலையுண்ட கிழவியிடமிருந்த ஒரு மோதிரம் குற்றவாளியிடமிருந்ததாகத் தெரியவருகிறது. அக்கிழவியிடம் வேறு மூன்று மோதிரங்களும் சில நகைகளும் பையில் கொஞ்சம் பணமு மிருந்ததாகவும் தெரிகிறது. அவைகளில் எதுவும் போகவில்லை. இதனுல் கொலைக்குக் காரணம் களவல்லவென்றும் விரோதமோ வஞ்சமோ காரணமென்றும் தெரிகிறது. அக்கன்னிகை சிறைச்சாலையிலிருக்கும் தன் பாட்டானுருக்காக மிக்க கஷ்டப்பட்டு வேலைசெய்து அவரை ஆதரித்து வருகிருள். இப்போது கடந்த இருபது வருடங்களாக நடந்துவரும் "பராங்குசம் பிள்ளை — துளசிங்கம் பிரபு" என்ற வியாச்சியத்தில் வாதியாகிய பராங்குசம் பிள்ளையின் பேத்தியே இக்கன்னிகை. பராங்குசம் பிள்ளையின் லாயராகிய தம்புசாமிப் பிள்ளை இச்சம்பவத்தைக் கேட்டதே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று அக்கன்னிகையைக் கண்டு பேசினுராம். அக்கன்னிகை தான் நிரபராதி யென்று மட்டும் மிக்க உறுதியாகக் கூறினுளே யன்றி வேறொரு விபரமும் கூறவில்லை யென்று தெரிகிறது. லாயர் தம்புசாமிப் பிள்ளை பரிதாபத்தோடு அக்கன்னிகையின் பட்சத்தில் லாயராகப் பேசப்போகிறுர் என்று தெரிகிறது. அக்கன்னிகை யிதுகாறும் மிக்க யோக்கியமானவளென்று கருதப்படினும் இப்போது அக்கிழவியோடு

சம்பந்தப்பட் டிருப்பதாகத் தெரிகிறபடியால் அவள் நடக்கை சந்தேகிக்கக் கூடியதாகவிருக்கிறது. ஏனெனில் அக்கிழவியின் யோக்கியதை நல்ல தல்லவென்று வெளி யாகிறது. நாளையதினம் குற்ற விசாரணை நடக்கும்போது தான் இதைப்பற்றிய மற்ற விவரங்கள் வெளியாகும்.''

இந்தப் பிரசுரம் வெளியானதே நகர் முழுதும் சங் கதி பரவிவிட்டது. மறுநாள் காலை பத்து மணிக்கு போலீஸ் கோர்ட்டில் ஏக ஜனங்கள் வந்து சூழ்ந்துகொண் டிருந்தார்கள். யாவர்க்கும் குற்றவாளியைக் காண வேண்டுமென்று பேரவா. இதை யறிந்த நியாயாதிபதி உண்ணாமுலையை ஒரு வண்டியில் ஏற்றிவரச் செய்து, வண்டியை நீதிஸ்தலத்தின் வாயிற்படிக்கருகில் நிறுத்தி வைத்து அக்கன்னிகையை யிறக்கி யுள்ளே தன்னறைக்கு அழைத்துவரும்படி ஏற்பாடு செய்தார். இதனால் சிலர் மட்டுமே அவள் முகத்தைக் கண்டார்கள். பத்திரிகை களில் வெளிவந்த வரையில் அவள் குற்றவாளி யென்றே யாவரும் கருதவேண்டி யிருந்தது.

உண்ணாமுலை வந்து கொஞ்சநேரம் கழிந்தபின் குற்ற விசாரணை செய்யும் நீதவான் விசாரணையை ஆரம்பம் செய்வதாகக் கூறினார். நீதிச்சபையில் அனேக வக்கீல் களும் பாரிஸ்டர்களும் வந்திருந்தார்கள்.

உண்ணாமுலை நீதிச்சபையில் கொண்டுவந்து நிறுத்தப் பட்டாள். அவள் தலை குனிந்தபடி தன் பெயர் தொழில் முதலியவற்றைப்பற்றிக் கேட்ட கேள்விகளுக்கு விடை யளித்தாள். அவள் முகக்குறியைக் கண்டவர்கள் "இவள் செய்த குற்றத்தை மறைப்பதில் மிக்க துணிகரமுடையவ ளாகவாவது அல்லது நிரபராதியாகவாவது இருக்கவேண் டும்'' என்று கருதினார்கள்.

இலிகிதர் உண்ணாமுலையை மேற்கண்டபடி கேள்வி

கள் கேட்டு முடிந்ததே அங்கிருந்த பாரிஸ்டர்களில் பிரசித்திபெற்ற பாரிஸ்டர் வரதப்பன் என்பவர் எழுந்து நியாயாதிபதியை நோக்கி "நான் குற்றவாளி பட்சம் பேசும்படி அமர்த்தப்பட் டிருக்கிறேன்" என்றார். உண்ணாமுலை இதைக் கவனிக்கவேயில்லை. ஆனால் லாயர் தம்புசாமி பிள்ளை அதைக் கேட்டதும் வெறுப்பும் கோபமுமடைந்து சட்டென்றெழுந்து நின்று "நான் குற்றவாளிக்காக அமர்ந்திருக்கிறேன். இன்னும் நான் எவரையும் எனக்கு உதவியிருக்கும்படி கேட்டுக்கொள்ளவில்லை. நண்பர் யாரால் ஏற்படுத்தப்பட்டாரோ?" என்றான்.

பாரிஸ்டர்:-"நியாயாதிபதிக்கு நான் அமர்த்தப்பட் டிருக்கிறேன் என்றதே போதுமானது. தனக்கு இத்தகைய ஆபத்தில் உதவி செய்யக்கூடிய நண்பர் யாரேனு முண்டோவென்பது பரிதாபமான இக்குற்றவாளிக்கே தெரியும்" என்றார்.

அப்போதுதான் உண்ணாமுலை திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். உடனே அவள் மனம் நிலையில் நின்றது. தனக்குள் சிந்தித்தாள். தனக்கு உதவிசெய்யத் தக்கவர்கள் இருவரே யுளர். ஒருவர் தன் பாட்டன், மற்றொருவர் தன்னை அந்த நெருக்கமான சந்தில் சந்தித்துப் பேசிய அந்த ஆடவன். இவர்களில் யார் இந்த பாரிஸ்டரை யமர்த்தியவர் என்று அவளுக்குப் புலப்படவில்லை. ஆனால் அந்த இருவரும் தன் நன்மையைக் கோருகிறவர்களே. ஆகையால் இந்த உதவியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதே என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு "பாரிஸ்டர் அவர்களுடைய உதவியை நான் வந்தனத்தோடு ஏற்றுக்கொள்கிறேன்" என்று கூறி அவருக்கு வந்தனமளித்தாள்.

இதனல் தம்புசாமிப் பிள்ளைக்குண்டான மனவெரிச்ச லுக்கு அளவேயில்லை. அவன் கெட்ட எண்ணம் நிறை வேறவொட்டாது ஆண்டவன் தடுத்துவிட்டான். சிறைச் சாலையிலிருக்கும் கிழவனை யழித்துவிட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் அவனுக்கு ஏற்பட்டது. உண்ணுமுலை பக்கம் பேசுவது போல் பேசி பக்குவமாய் அவள் தண்டனை யடையும்படி வழி தேடிவிட்டால் அதோடு கிழவனுக்கு ஆதரவே யில்லாமற் போம். அதுவுமன்றி அத்துயரத் தால் அவன்மடிந்தே போவான். இப்போது பாரிஸ்டர் வரதப் பிள்ளை அவள் பட்சம் ஏற்பட்டதால் தான் ஒன் றும் செய்யமுடியாது. அதனல் உண்ணுமுலை கூறியதைக் கேட்டதே தம்புசாமிப் பிள்ளை பின்னும் கோபங்கொண்டு அவளை நோக்கி, "ஏனம்மா! நான் உன் பாட்டனரின் வக்கிலாக விருப்பதால் சுயநலங் கருதாமல் நல்ல எண் ணங்கொண்டு உனக்கு உதவிசெய்ய வந்தேன் என்பது உனக்கே தெரியுமல்லவா?" என்றுன்.

உண்ணுமுலை பாரிஸ்டரை யார் அமர்த்தியிருந்தா லும் சரி - அவர் உதவியையே நம்பிவிடுவோம் என்ற எண்ணத்தோடு தம்புசாமிப் பிள்ளைக்கு ஒரு பதிலும் கூற வில்லை. நியாயாதிபதி தம்புசாமிப் பிள்ளையை நோக்கி "தங்கள் கருத்து நல்ல கருத்தென்பதில் ஒரு சந் தேகமுமில்லை. ஆனல் குற்றவாளி நமது பாரிஸ் டர் வரதப்பிள்ளை யவர்களின் உதவியை யேற்றுக்கொண் டாள். ஆகையால்..." என்றதே வரதப்பிள்ளை "நான் இதில் பிரவேசிக்கமாட்டேன். ஆனல் கடந்த இருபது வருடங்களாக நான் லாயராகவிருக்கும் அந்த வயோதி கருக்காக நடக்கும் விஷயத்தைக் கவனித்துக்கொண் டிருப்பேன்." என்றார்.

பாரிஸ்டர் வரதப்பிள்ளை:—" நான் ஒரு விஷயம் கூற

வேண்டும். இப்போது நான் நமது சகோதரரை அகௌரவப்படுத்த நினைக்கவில்லை. அவர் இதை நடத்தப் போதுமான வல்லமையுடையவரல்லவென்று நினைக்கவுமில்லை. அவரே யிதை நடத்தினும் மிக்க சாதுரியமாகவும் கௌரவத்தோடுமே நடத்துவார் என்பதில் அய்யமேயில்லை. என் கடமையைச் செலுத்த நான் இதை நடத்தப்போகிறேனேயன்றி வேறில்லை.'' என்றார்.

தம்புசாமிபிள்ளை:—“ நமது சகோதரரின் அபிப்பிராயத்திற்காக மிக்க வந்தன மளிக்கிறேன் '' என்றான்.

வக்கீல்களின் மனஸ்தாபம் ஒழிந்ததும் விசாரணை தொடங்கியது. கொலை நடந்த விடத்தைக்கண்ட போலீஸார் இருவரும் முதலில் சாக்ஷிகளாக விசாரிக்கப்பட்டார்கள்.

அவர்களில் ஒருவன்:—“ நான் சின்னதோட்டத்தில் காவல் இருந்தேன். மூன்று மணிக்குமேல் என்னை விடுவிக்க இன்னொருவன் வந்தான். நான் வீட்டிற்குத் திரும்பும்போது கொஞ்சதூரம் வரையில் அவனோடு பேசிக்கொண்டே அங்கிருந்த நெருக்கமான சந்தின் வழியாகச் சென்றுகொண் டிருந்தேன். அங்கே வேலி யோரத்திலிருந்த புல் தரையில் ஒரு ஸ்திரீ மல்லார்ந்து வீழ்ந்திருந்ததைக் கண்டு அருகிற்சென்று பார்த்தோம். அவள் சவமாக விருப்பதைக் கண்டு நன்றாய்க் கவனித்துப் பார்த்தபோது கொலை நடந்திருக்கிறதென்றும் அம்மாது நெஞ்சு இறுக்கப்பட்டுக் கொல்லப்பட்டாளென்றும் தெரிந்தது.

அச்சமயம் ஒரு வாலிபர் அங்கு வந்தார். அவர் சற்று நேரத்திற்கு முன்பு அம்மாதும் ஒரு கன்னிகையும் சச்சரவு செய்துகொண் டிருந்ததைத் தாம் கண்ட

த்தாகக் கூறினார். அச்சமயம் அக் கன்னிகை அதாவது குற்றவாளி “ எனக்குப் புலியின் ஆத்திரம் இப்போதுண் டாயிருக்கிறது” என்று கூறியதாகவும் கொலை யுண்ட வள் ஒரு மோதிரத்தை யக்கன்னிகைக்குக் காட்டிப் பய முறுத்திக்கொண் டிருந்ததாகவும் கூறினார். அவர் மூல மாகக் குற்றவாளியின் பெயர் உண்ணாமுலை யென்று அறிந்துகொண்டோம் என்று தேவராஜு கூறிய சங்கதி களையும், பிறகு சுகவிலாசத்திற்குச் சென்று இராஜம்மா ளிடம் விசாரித்து உண்ணாமுலை யணிந்திருந்த உடை முதலியவற்றின் அடையாளங்களையும் அவள் வாசஸ்தலத் தையும் அறிந்துகொண்டதையும் கூறியபின்,

“பிறகு அந்த விடத்திற்குச் சமீபத்தில் சென்று கொண்டிருக்கும் மோடார்வண்டி யோட்டுபவனை விசா ரித்தபோது அந்த அடையாளங்களையுடைய ஒரு கன் னிகை சுமார் நான்கு மணிக்கு வண்டியிலேறி ஆலமரத் தெருவில் இறங்கிவிட்டதாகக் கூறினான். பிறகு நாங்கள் குற்றவாளியின் வாசஸ்தலத்திற்குச் சென்று குற்றவாளி யைக் கண்டபோது பக்கத்திலிருந்த மேஜையின்மேல் கொல்லப்பட்ட கிழவி அணிந்திருந்த மோதிரம் வைக்கப் பட்டிருந்ததைப் பார்த்தோம். தேவராஜுப் பிள்ளை யம்மோதிரத்தில் சுற்றிலும் முத்துகளும் மத்தியில் ஒரு சிகப்புக் கல்லும் வைக்கப்பட் டிருந்தது என்று கூறிய அடையாளப்படி அந்த மோதிரமே யென்று அறிந்து கொண்டோம். நான் அம்மோதிரத்தை யெடுத்தபோது குற்றவாளி மிக்க மனக்கலக்கமும் ஆத்திரமுமடைந்து ‘அய்யோ அதை யெடுத்துக்கொள்ள வேண்டாம். கொடுத்துவிடும். அந்த மோதிரத்திற்காக நான் பட்ட மனோவேதனை கடவுளுக்கே தெரியும்’ என்று கூவினாள்” என்றான்.

பாரிஸ்டர்:—அப்போது குற்றவாளி தான் குற்றவாளி யென்றாவது, குற்றம் செய்யவில்லை யென்றாவது ஏதேனும் கூறினளா?

போலீஸ்காரன்:—கடவுளறிய நான் நிரபராதி என்று கூறினள்.

பாரிஸ்டர்:—மிக்க ஆத்திரத்தோடு கூறினளோ?

போலீஸ்:—ஆம் மிக்க ஆத்திரத்தோடேயே 'அய்யோ கடவுளறிய நான் நிரபராதி' என்று கூவினள். ஆனல் அத்தகைய மறுப்பு வார்த்தைகள் குற்றவாளிகள் கூறுவதைப் பன்முறை கேட்டிருக்கிறோம்.

பாரிஸ்டர்--"நான் உன்னுடைய அபிப்பிராயத்தையாவது அநுபவத்தையாவது கேட்கவில்லை. நடந்த சங்கதியையே நீ கூறவேண்டும். இனி நீ இறங்கிவிடலாம்" என்றார்.

பிறகு மற்றொரு போலீஸ்காரன் விசாரிக்கப் பட்டான். அவன் முதல் கூறியவன் மொழிந்ததையே மொழிந்தான். கடைசியில் பாரிஸ்டர் அவனை நோக்கி, "தேவராஜுப்பிள்ளை கூறியதனல்தானே குற்றவாளி அக் கிழவியோடு கோபமாகப் பேசிக்கொண்டிருந்தாளென்று உங்களுக்குத் தெரியும்?" என்றுகேட்டார்.

போலீஸ்:—ஆம்.

பாரிஸ்:—நீங்கள் அச்சந்தின் வழியாக வந்தபோது குற்றவாளியைக் கண்டீர்களா?

போலீஸ்:—இல்லை.

பாரிஸ்:—தேவராஜு சென்றபின் குற்றவாளி கிழவியை விட்டுப் பிரிந்து சென்றிருந்து, வேறு யாரேனும் அங்கு வந்து கிழவியைக் கொன்றிருக்கலாமல்லவா?

போலீஸ்:—ஆகா அப்படியும் நடந்திருக்கலாகும்.

பாரிஸ்.—“சரி நீ சாட்சிக்கூண்டைவிட்டிறங்கலாம்.”

என்று கூறியதும் அவன் இறங்கிச் சென்றான்.

அதன் பிறகு பாரிஸ்டர் சவத்தைச் சோதனை செய்த டாக்டர் மாடாசாமி பிள்ளை வந்திருக்கிறாரா என்று விசாரித்தபோது அவர் இன்னும் வரவில்லையென்று தெரிந்தது. அதன்மேல் தேவராஜுப் பிள்ளையை விசாரிக்கலாமென்றார். அவ்வாறே தேவராஜுப்பிள்ளை யுடனே சாட்சிக் கூண்டில் வந்து நின்றான்.

அவன் தானும் தன் தாயாரும் அச்சந்தின் வழியே யுலவச் சென்றபோது கிழவியும் குற்றவாளியும் அங்கு நின்றிருந்ததையும், குற்றவாளி ஆத்திரத்தோடு கூறிய வார்த்தைகளையும் முன்பு போலீஸாரிடம் கூறியது போலவே கூறினான். அவன் முகத்தில் மிக்க விசனம் தோன்றியது. தனக்கு மனப்பூர்வமாய்ப் பிரியமில்லாத செய்கையை எதற்கோ கட்டுப்பட்டு விதியில்லையென்று கூறுகிறான் என்று நன்றாகப்புலப்பட்டது. அவன் மோதிர விஷயத்தைப்பற்றிக் கூறியபோது உண்ணாமுலையின் முகத்தில் ஒருவித ஆச்சரியமான விகாரமுண்டாயிற்று. அவள் மிக்க ஆத்திரத்தோடு என்னவோ கூறமுயல்பவள்போல் காணப்பட்டாள். அவள் உதடுகள் துடித்தன. தேகம் பதைத்தது. ஆனால் மறுபடி என்னவோ நினைத்துக்கொண்டு மிக்க கஷ்டத்தோடு மனதை யடக்கிக்கொண்டாள் என்றும் புலப்பட்டது. பாரிஸ்டர் வரதப்பிள்ளை மட்டும் அதை நன்றாய்க் கவனித்தார். தேவராஜு தான் கண்டவற்றில் எதையும் மறைக்காமலும் எள்ளளவேனும் கூட்டாமலும் கண்டது கண்டபடிக்கே கூறினான்.

அவன் யாவும் கூறியபின் பாரிஸ்டர் அவனை நோக்கி,

"நீர் அக்கிழவியையும் குற்றவாளியையும் அங்கு கண்டபோது மணி என்ன விருக்கும்?" என்றார்.

தேவராஜ-ு:—சுமார் மூன்று மணி யிருக்கும்.

பாரி:—அங்கிருந்து வீட்டிற்கு நீர் திரும்பியபோது நிதானமாகச் சென்றீரா? துரிதமாகச் சென்றீரா?

தேவ:—நிதானமாகவே சென்றேன்.

பாரிஸ்:—எவ்வளவு நேரத்தில் வீடுபோய்ச் சேர்ந்திருப்பீர்?

தேவ:—சுமார் கால்மணி நேரத்திற்குக் கொஞ்சம் குறையவிருக்கலாம்.

பாரிஸ்:—வீட்டிற்குச் சென்றபின் வீட்டில் எந்நேரம் வரையில் உமது தாயாரின் வருகைக்காக எதிர் பார்த்தீர்?

தேவ:—கால் மணிக்கு அதிகமே யிருக்கும்.

பாரிஸ்:—பிறகு அங்கிருந்து சுற்று வழியாக அல்லவா அச்சந்திற்கு மறுபடி சென்றதாகக் கூறி யிருக்கிறீர்.

தேவராஜ-ு:—ஆம்.

பாரிஸ்டர்:—அப்போது எவ்வளவு நேரத்தில் சவம் இருந்த விடத்திற்குச் சென்றிருப்பீர்?

தேவ:—துரிதமாகச் சென்றதால் கால் மணியில் சென்றிருப்பேன்.

பாரிஸ்:—ஆகையால் நீர் முதலில் குற்றவாளியையும் அக்கிழவியையும் பார்த்த காலத்திற்கும், பிறகு இரண்டாம் முறை யங்குசென்று சவத்தையும் போலீஸாரையும் கண்டதற்கும் இடையில் எவ்வளவு காலம் கழிந்திருக்கும்?

தேவ:—கிட்டத்தட்ட ஒரு மணிநேர மிருக்கும்.

பாரிஸ்:—அந்த ஒரு மணி நேரத்தில் குற்றவாளி கிழவியை விட்டுப் பிரிந்துபோய் வேறொரு ஆள் அங்குவந்து

அவளைக் கொன்றிருக்கலாமல்லவா ? அவ்வளவு அவகாசமிருந்த தல்லவா ?

தேவ:—ஆகா தடையின்றி அப்படி நடந்திருக்கலாம்...

பாரிஸ்:—"சரி. இவ்வளவே தாங்கள் இறங்கிவிடலாம்" என்றார்.

அதன் பிறகு மோடார் வண்டி யோட்டுபவன் சாக்ஷிக் கூண்டில் நிறுத்தப்பட்டான். அவன் பின் வருமாறு கூறினன்:—நேற்று மாலை சுமார் நான்கு மணி வேளைக்கு நான் வண்டியை யோட்டிக்கொண்டு புதுத் தோப்பினருகாமையில் வரும்போது குற்றவாளி வந்து வண்டியிலேறினன். அப்போது இவள் முகம் மிக்க விகார மடைந்து இருந்தது. விசேஷ மனக்கலக்கமும் பீதியும் உடையவள்போல் காணப்பட்டாள். நான் "ஏனம்மா? உனக்கேதேனும் அசௌக்கியம் நேரிட்டதோ?" என்று வினவினேன். இக்கன்னிகை வாய் திறந்து பேச முடியாதவள்போல் மௌனமாக விருந்தாள். பிறகு வண்டியிலிருந்திறங்குமட்டும் மனக்கலக்கத்தோடேயே யிருந்தாள். தன் கையில் ஒரு மோதிரத்தை வைத்துக்கொண்டு அடிக்கடி யதைப் பார்த்துக்கொண்டே வந்தாள். கடைசியில் ஆலமர வீதியில் இறங்கிவிட்டாள்." என்றான்.

பாரிஸ்டர்:—வண்டியில் ஏறும் பல ஜனங்களிருக்க நீ இக்கன்னிகையை மட்டும் அவ்வளவு அக்கரையாகக் கவனிப்பானேன்.

வண்டி யோட்டுபவன்:—அச்சமயம் வண்டியில் எனக்கருகாமையிலிருந்த பலகை யாசனத்தில் இக்கன்னிகை மட்டுமே உட்கார்ந்திருந்ததால் நான் கவனிக்க நேர்ந்தது.

அதன் பிறகு நியாயாதிபதியிடமிருந்த மோதிரம் அவனுக்குக் காட்டப்பட்டது "இந்த மோதிரந்தான்

குற்றவாளி தன் கரத்தில் வைத்துக்கொண் டிருந்தது'' என்றான்.

இவன் சாட்சியம் முடிந்தபின் சுந்தரம்மாள் விசாரிக்கப்பட்டாள். அவள் நீதிச் சபையில் வந்து நின்றதும் கண்ணீர் விட்டுக்கொண்டே உண்ணுமுலையின் கரங்களைப் பற்றி முத்தமிட்டுக்கொண்டு "என் கண்ணே! கடவுள் உன் நிரபராதத் தன்மையைக் கடைசியிலேனும் ருசுப்படுத்திவிடுவார். அதிற் சந்தேகங்கொள்ள வேண்டாம்'' என்று கூறினள்.

பாரிஸ்டர் அவளை நோக்கி "அம்மா! இக் குற்றவாளி எவ்வளவு காலமாக உன் வீட்டில் இருக்கிறள்? இவளைப்பற்றி உனக்கென்ன தெரியும்?'' என்று கேட்டார்.

சுந்தரம்மாள் கண்களில் நீர் பெருக்கிக் கொண்டே "அய்யோ! நான் இவளைச் சிறுவயதி லிருந்தறிவேன். அது முதலே இவள் மிக்க யோக்கியமானவ ளென்று இவள்மேல் எனக்கு மிக்க விசுவாசம். இவள் தாய்தந்தையர் இறந்துபோனபின் இவள் தன் அத்தையிடம் வசித்துக்கொண் டிருந்தாள். அந்தம்மாள் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் இறந்துபோனது முதல் இவள் என் வீட்டில்தான் வசிக்கிறள். அய்யோ இவள் ஒரு எறும்பைக்கூட இம்சிக்கும் குணமுடையவ ளல்லவே, தங்கமாயிற்றே. இவள் கொலைசெய்தாள் என்று நம்புவதாயின் தெய்வமே! நானே செய்தேன் என்று கூறலாம். நியாயாதிபதிப் பிரபு தாங்களே இக்கொலைசெய்தீர்கள் என்று நம்புவதுபோல்தான் இவள்மேல் இந்த அபாண்டத்தைச் சுமத்துவது. அந்த மோதிரம் என்ன மாயத்தால் இவளிடம் வந்ததோ, இது யாரோ வேண்டு மென்றே செய்திருக்கிறர்கள். அந்தோ இவள் எண்ணம் முழுமையும்

செய்கை முழுமையும் சிறைச்சாலையில் அநியாயமா யடைத்து வைக்கப்பட் டிருக்கும் தன் பாட்டனாரைப் போஷித்து வருவதிலேயே யிருக்கிறதே, இவளுக்குச் சினேகராவது சுற்றத்தாராவது இல்லையே. அய்யையோ இவள் கொலை செய்தவளல்ல, கடவுளுக்கு இது எள்ளளவும் ஒப்பாது. இவளை விட்டுவிட்டுப் பதிலுக்கு என்னைவேண்டுமாயின் பிடித்துக் கொள்ளுங்கள்" என் பிரலாபித்து ஆவிசோர்ந்து கீழே விழப்போனாள்.

அருகிலிருந்த காவலர்கள் அவளைப் பிடித்து மெதுவாய் நடத்திக்கொண்டு அப்புறம் அழைத்துச் சென்றார்கள்.

சுந்தரம்மாள் கூறியவைகளையும் அவள் பிரலாபனையையும் கேட்ட அனைவரும் மனங்கரைந்து விட்டார்கள். தேவராஜு உண்ணுமுலைக்கு விரோதமாகக் கூறிய ருசுக்களையெல்லாம் அச்சமயம் மறந்து விட்டு இவள் நிரபராதியே யென்று கருதினார்கள்.

அதன் பிறகு சுகவிலாசத்திலுள்ள வேலைக்காரியாகிய இராஜம்மாள் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டாள். அவள் பின் வருமாறு கூறினாள்.

"நேற்று சுமார் இரண்டுமணிக்கு முன் குற்றவாளி என் எஜமானிகளுக்காக தைத்த உடைகளை யெடுத்துக் கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தாள். பிரபல இரொட்டி வியாபாரியாகிய இரங்கசாமிப் பிள்ளை ஆலமர வீதியில் இருப்பவர், அவர் இவளைச் சிறுவயது முதலறிவார். அவர் இவள் மிக்க யோக்கியவதியென்றும் கடவுள் பக்தி, சீவகாருண்யம், அச்சம், மரியாதை யுடைய கன்னிகையென்றும், இந்தவயதில் இரவு ஒருமணி இரண்டுமணி வரையில் கஷ்டப்பட்டு தையல் வேலைசெய்து சிறைச்சாலையில் இருக்கும் தன் பாட்டனாருக்கு நல்ல அறுசுவை

யுண்டி சுத்தமான உடை இவைகளை யளித்து வருகிருளென்றும் தன் வரையில் அற்ப ஆகாரம் புசித்துக் காலங் கழித்து வருகிருளென்றும் இவளுக்குக் கிடைக்கும் கூலியோ மிக்க குறைவானதால் இத்தகையவளுக்கு உபகாரம் செய்வது நல்ல பலனளிக்குமென்றும் சிபாரிசுசெய்தார்.

ஆகையால் என் எஜமானிகள் இவளுக்கு வேலை யளிக்கத் தொடங்கினுர்கள். பிறகு இவளை நேரில்பார்த்த போது இரொட்டிக் கடைக்காரர் இவளைப்பற்றிக் கூறியவை யாவும் உண்மையேயென்று தெரிந்தது. இவற்ருல் நேற்று இவள் வந்தபோது என் எஜமானி இவளுக்கு ஆகாரமளிக்கும்படி கட்டளை யிட்டாள். நான் ஆகாரமளித்தேன். இவள் போசனம் செய்தபின் சற்று நேரம் இளைப்பாறி யிருந்து சுமார் மூன்றுமணிக்கு எங்கள் வீட்டிலிருந்து சென்ருள். செல்லும்போது என் எஜமானி புது உடைகளுக்காக அளித்த சாமான்களை யெடுத்துக் கொண்டு சென்ருள்'' என்ருள்.

இதற்கிடையில் சவத்தைச்சோதனைசெய்த டாக்டர் மாடாசாமிபிள்ளை நியாயசபைக்கு வந்துவிட்ட படியால் கடைசியில் அவர் விசாரிக்கப்பட்டார். அவர் பின்கண்டபடி கூறினுர்.

"நேற்றுமாலை ஒரு சவம் என் சோதனைக்குவந்தது. அது ஒரு ஸ்திரீயின் சவம். அவள் கொலை செய்யப்பட்டிருந்தாள். நெஞ்சைப்பிடித் தழுத்தியதால் சுவாசம் தம்பித்துப்போய் பிராணன் நீங்கிவிட்டிருந்தது. அவள் நெஞ்சு பலமாய் நெருக்கப்பட் டிருந்தது. அவள் மார்பின்மேல் ஏதோ பலமாய் வைத்தழுத்தப்பட் டிருந்தது. நெஞ்சில் நகக்குறிகள் இருப்பதாலும் மற்ற அடையாளங்களாலும் நெஞ்சு கரங்களால் அழுத்தப்பட்டதென்று தெரிகிறது.'' என்ருர்.

பாரிஸ்டர்:—அப்படி பிராணன் போகும்படி பலமாக அழுத்தக்கூடிய கரங்கள் ஆடவன் கரங்களாக விருக்குமா, ஸ்திரீயின் கரங்களாக விருக்குமா?

டாக்டர்:—எவருடைய தாயினும் இருக்கலாம். அதிலும் இச்சந்தர்ப்பத்தில் அக்கரங்கள் மிக்க வலிவுடைய கரங்களாகவே யிருக்கவேண்டுமென்ற அவசியங்கூட இல்லை. ஏனெனில் கொலைசெய்யப்பட்ட கிழவிதர் நடக்கையாலும் தீயமனோசுபாவத்தாலும் மிக்க பலஹீன மடைந் திருந்தாள். . ஆகையால் அவள் நெஞ்சையழுத்திய கரங்கள் பலம்பொருந்திய வைகளாக விருந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

பாரிஸ்டர்:—"இக்குற்றவாளியின் கரங்கள் அதைச்செய்திருக்கலாமா? பார்த்துக் கூறுங்கள்" என்றுர்.

டாக்டர்:—அவ்வாறே சோதித்துப் பார்த்தார். அவர் பார்க்கும்போது யாவரும் நிர்ச்சந்தடியாய் டாக்டர் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்தார்கள். டாக்டர் சற்றுநேரம் அவள் கரங்களைப்பார்த்து "இக்கரங்கள் செய்திருக்கலாம்" என்றுர்.

பாரிஸ்டர்:—கழுத்திலிருக்கும் தழும்புகள் இக்கன்னிகையின் விரல்களின் அளவிற்கு ஒத்திருக் கின்றனவா?

டாக்டர்:—கழுத்து முழுமையும் அதிகமாக வீங்கியிருக்கிறது. ஆகையால் தழும்புகள் முதலிலிருந்த அளவைக்கடந்து பெரியவையாய் வீங்கியிருக் கின்றன. அதனல் தழும்புகளைக் கொண்டு விரல்களின் அளவைக் கண்டறிய முடியாது.

பாரிஸ்டர் "இருக்கட்டும் என் கேள்வியை வேறு விதமாகக் கேட்கிறேன். "இக்கரங்களைவிடப் பலம்பொருந்தியகைகள் அதைச் செய்திருக்கலாமா?"

டாக்டர் :—செய்திருக்கலாம்.

பாரிஸ்டர்:—இக்கரங்களைவிட நுட்பமான கரங்கள் செய்திருக்கலாமா?

டாக்டர்:—ஆகா செய்திருக்கலாம்.

பாரிஸ்டர்:—அப்போது, இந்தக் கரங்களே செய்தனவென்று கூறக்கூடாதல்லவா?

டாக்டர்:—கூறமுடியாது.

பாரிஸ்டர் "போதும், தாங்கள் இறங்கிவிடலாம்" என்றதே டாக்டர் வெளியிற் சென்றார்.

அதன் பிறகு நியாயாதிபதி பாரிஸ்டர் வரதப்பிள்ளையை நோக்கி "தாங்கள் கூற வேண்டியது ஏதேனுமிருக்கிறதோ?" என்று வினவினர்.

பாரிஸ்டர்:—"இது தீர்மானமான விசாரணைக்கு வேறிடம் செல்லவேண்டியிருக்கிறது. தாங்கள் எப்படியாயினும் இதைப் பிரதம நியாயஸ்தலத்திற்கு அனுப்ப வேண்டியதே. ஆயினும் இரண்டொரு மொழிகள் மட்டும் கூற விரும்புகிறேன். குற்றவாளி கொலை செய்ததை யொருவரும் காணவில்லை. டாக்டர் சோதனையாலும் குற்றவாளியின் கரங்களே அக்குற்றத்தைச் செய்ததாக ஏற்படவில்லை. மூன்று மணிக்கும் நான்குமணிக்குமிடையில் குற்றவாளி கொலையுண்டவளைக் கண்டபின் வேறு யாரேனும் அவளைச் சந்தித்திருக்கலாம். அவர்கள் அவளைக் கொன்றிருக்கலாம் என்று நினைப்பதற்கு தாராளமாக இடமிருக்கிறது. குற்றவாளியின் நடக்கையோ எள்ளளவு மாசுகூட இல்லாததாக விருக்கிறது. சந்தர்ப்ப சாட்சியமாக அம்மோதிரம் ஒன்று குற்றவாளியிடமிருந்தகப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனல் அது அதிசயமான வேறு வழியாக அவளிடம் சேர்ந்திருக்கலாகும். அம்மோதிரத்தைக் களவாடக் குற்றவாளி

அவளைக் கொன்றதாயின் இறந்தவள் கரத்திலிருந்த மற்ற மோதிரங்களையும் பணப்பையையும் எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிட்ட வரையில் குற்றவாளி பைத்தியம் பிடித்தவளாகவே யிருக்கவேண்டும். நான் இன்னும் குற்றவாளியைக் கலந்து பேசவில்லை. இக்காரணங்களால் பிரதம நீதிஸ்தலத்தில் இதைப் பற்றிய எல்லா விவகாரங்களும் வெளியாகி அவளுடைய நாட்டாராகிய ஜூரர்கள் அவளைக் குற்றவாளி யென்று தீர்மானிக்கிற வரையில் ஒருவரும் அவ்வாறு கருதலாகாதென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நிரபராதியைக் காப்பாற்றவேண்டியது ஆண்டவன் கடமை'' என்று கூறி முடித்தார்.

அதன்பிறகு நியாயாதிபதி அக்குற்றச் சாட்டைப் பிரதம நீதிஸ்தலத்திற்கு அனுப்புவதாகக் கூறினர். விசாரணை முடிந்தபின் உண்ணாமுலை மிக்க களைப்படைந்தவளாகக் காணப்பட்டமையாலும், இப்போதவளை வெளியில் அழைத்துச் சென்றால் இன்னும் வீதியில் கும்புகூடியிருக்கும் ஜனங்கள் அவளைப் பார்க்க மேல்விழுந்து செல்வார்கள் என்பதனாலும் அவளைத் தமதறையில் கொண்டு போய்விட்டு இளைப்பாறச் செய்யும்படி கட்டளையிட்டார்.

---

20 - வது அத்தியாயம்.

மாதர் குணங்களிலுள்ள வித்தியாசம்.

உண்ணாமுலை சிறை செய்யப்பட்ட சங்கதியைக் கேட்ட ஞானம்பாள் மிக்க வியாகூலமடைந்தாளென்றும் அவள் நிரபராதி யென்றே நம்பியிருக்கிறாளென்றும் முன்னமே கூறியிருக்கிறோம். ஆயினும் மறுநாட் காலை பத்திரிகையில் இருந்த விஷயத்தைப் பார்த்த

போது அவள் நம்பகம் கலங்கிவிட்டது. ஆயினும் அவள் கொலை செய்தே யிருப்பாளென்று நம்ப முடியவில்லை. "அடடா! இதென்ன அபூர்வமாக விருக்கிறது. இத் தகைய முகத்தையும் நடக்கையையும் குணத்தையு முடைய கன்னிகை இப்படிச் செய்தாளெனின் இதென்ன மாயமாகவல்லவோ விருக்கிறது. அப்புறம் எப்படிப் பட்டவர்களைத்தான் நம்புவது. நம்மையே நாம் நம்ப லாகாதுபோல் காண்கிறதே" என்று இவ்வாறு தனக்குள் வியாகூலப்படலானாள். ஆயினும் அவளை நேரில்கண்டே அறியவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டாள்.

கொலை நடந்த மறுநாள் காலை இராஜாம்பாளை நீதிச் சபைக்கு சாக்ஷிகூற வரும்படி அறிவிப்பதற்காக ஒரு போலீஸ்காரன் சுகவிலாசத்திற்கு வந்தான். ஞானம் பாள் அவனை நோக்கி "நான் வந்து உண்ணுமுலையைக் காணக்கூடுமா?" என்று கேட்டாள்.

போலீஸ்காரன்:—"அம்மா! தாங்கள் சுமார் மூன்று மணிக்கு நீதிச் சபைக்கு வந்தால் அவ் வேளைக்கு விசாரணை முடிந்திருந்தால் காணலாம்" என்றான்.

ஞானம்பாள், "உண்ணுமுலை இத்தகைய ஆபத்தில் சிக்கிக்கொண் டிருப்பதால் அவளுக்கு நியாயவாதியொருவரின் (வக்கீல்) உதவி வேண்டுமே" என்று அவனை விசாரித்தபோது அவன் "அம்மா அக் கன்னிகையின் பாட்டனாராகிய பராங்குசம் பிள்ளையின் வக்கீல் தம்புசாமிப் பிள்ளை இச்சங்கதியைக் கேட்டதும் போலீஸ் சாவடிக்குச்சென்று அக்கன்னிகையைக் கண்டு பேசித் தான் அவளுக்காகப் பேசுவதாய்க் கூறியிருக்கிறார்" என்றான்.

அதன்பிறகு ஞானம்பாள் உண்ணுமுலையின் பாட்டனைப் பற்றிச் சிந்தித்தாள். அந்தோ அவளுக்கு இந்த ஆபத்து நேர்ந்ததால் அந்த வயோதிகன் ஆதரவை யிழ

ந்துவிட்டனனே என்று துக்கித்துக் கடைசியில் ஒரு பத்து பவுன் நோட்டை ஒரு கடித உறையில் வைத்து, ஒரு சினேகர் அனுப்பியது என்று அதில் சீட்டெழுதி வைத்து அரச்கு முத்திரைபோட்டு நம்பிக்கையான ஒரு ஆள் வசம் கொடுத்து அக்கிழவரிடம் கொடுக்கும்படி யனுப்பினுள்.

ஞானம்பாள் உண்ணுமுலேயைக் காணச் செல்லும் போது கூட ஒருவர் துணையாய் வந்தால்தான் ஒழுங்காக விருக்குமெனக் கருதித் தன் சகோதரியைக் கூடவரும் படி கேட்டாள். செல்வாம்பாள் அத்தகைய நடக்கை களில் பிரியமுடையவளல்ல. ஆதலின் ஞானம்பாள் கேட்டதற்குப் பதில் பெருமையோடு பல காரணங்களேக் கூறத் தொடங்கினுள்.

தான் உண்ணுமுலேயை இப்போதே குற்றஞ்செய்த வளாகக் கருதாவிடினும் அவள் நடக்கை குற்றமற்ற தென்று ருசுவாகுந் தனிலும் அவளேக் காணத் தனக்குப் பிரியமில்லே யென்றும், அது எப்படியாயினும், விசேஷ மாக அயோக்கியர்களே இருக்கு மிடமாகிய போலீஸ் சாவடிக்குள் வரத் தன்மனம் சகியாதென்றும், தன் தலே யும் கொஞ்சம் வலிக்கிற தென்றும், தான் வாசித்துக் கொண்டிருக்கும் கதையை யிச்சந்தர்ப்பத்தில் நிறுத்த முடியாதென்றும், இவையன்றி மூன்றுமணிக்கு இரண்டு நண்பர்கள் வருவதாகக் கூறியிருக்கிறுர்க ளென்றும் மொழிந்தாள்.

இம்மொழிகளே யெல்லாம் கேட்ட ஞானம்பாள் தன் சகோதரி கண்டகனவால் யாதொரு எச்சரிக்கையும் பெறவில்லேயென்றும், வீண்பெருமையிலும், அற்ப விஷ யங்களிலும் அற்ப சுகங்களிலும் நாட்டம் வைப்பதிலும், ஆராயாது கண்டவர்களுடன் நட்பு கொள்வதிலும் முன்

னிலும் அதிக விருப்பம்கொண் டிருக்கிருளேயன்றி சற்றும் குறையவில்லே யென்றும் கண்டு மிக்க மனவருத்தமடைந்தாள்.

அதன்பிறகு உண்ணுமுலேயைக்காண யாரை அழைத்துச் செல்லலாமென்று சிந்தித்தாள். கடைசியில் நீலாட்சியின் நினேவுவந்தது. சுமார் இரண்டரைமணிக்கு உடுத்திக்கொண்டு தம்புசாமிப் பிள்ளேயின் வீட்டிற்குச் சென்ருள். அச்சமயம் லாயர் நீதிச்சபையி லிருந்தார். அவர் மனேவி கடைவீதிக்குச் சென்றிருந்தாள். ஆகையால் நீலாட்சி தனியே யிருந்தாள். ஞானம்பாள் அவளேக் கண்டதும் இருவரும் உண்ணுமுலேயின் விஷயத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினுர்கள். ஞானம்பாள் "அவளே நாங்கள் அறிவோம். நேற்று நீ வந்திருந்த அதேசமயம் அவளும் அங்கு வந்திருந்தாள்." என்ருள்.

நீலாட்சி:—"அய்யோ! என்ன மானக்கேடு!" என்ருள்.

ஆனல் கொல்லப்பட்ட அக்கிழவி தனக்கு மிக்க அறிமுகமானவள் என்பதை மட்டும் கூறவில்லே.

ஞானம்பாள் சற்று வெறுப்படைந்து "அவள் நிரபராதி யென்று கடைசியில் ருசுவாகி விட்டால் மானக்கேடு ஒன்றுமில்லே" என்ருள்.

நீலாட்சி:—என் வரையில் நான் அவள் குற்றவாளி யென்றே கருதவேண்டி யிருக்கிறது.

ஞானம்:—உன் பெரியதந்தையின் அபிப்பிராயம்என்ன?

நீலாட்சி:—அவர் நேற்று இதைக் கேட்டதே கேவலம் பச்சாத்தாபத்தால் ஸ்டேஷனுக்குச் சென்று அவளேக்கண்டு பேசினுர். அவர் அவள் குற்றம் செய்தவளே யென்று கருதுகிருர்.

ஞானம்பாள் மிக்க வியாகூலமடைந்து "அட கடவுளே! என்ன விபரீதம், என்னகோரம். அவளேப்

போன்றவள் கொலைக் குற்றத்தைச் செய்தாள் என்பது உண்மையாயின் இனி மனிதரின் முகலட்சணம் முதலிய வற்றைக்கொண்டு ஒரு அபிப்பிராயம் கொள்வது தவ றென்றே கருதவேண்டும். எத்தகைய தோற்றமுடையோ ரையும் நல்லவர்கள் கெட்டவர்கள் என்று நம்பலாகாது'' என்றாள்.

நீலாட்சி:—"நான் கூறுவதைக்கேள்—என் பெரியதந்தை லாயர்வேலையில் மிக்க அனுபோகமுடையவர். இத்த கைய விஷயங்கள் எத்தனையோ பார்த்திருப்பார். மனிதர்களின் முகக்குறியாலும் சம்பாஷணையாலும் அவர்களுடைய அந்தரங்க எண்ணங்களை யெல்லாம் அறியும் சக்திவாய்ந்தவர். அவர் நேற்று போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வந்ததும் வெறுப்போடும் மனச் சோர்வோடும் என்னிடமும் என் பெரிய தாயாரிட மும் அவள் குற்றம் செய்தவளென்றே தமது மன திற்குப் பூரணமாகப் புலப்படுகிறதென்று கூறி ஞர்'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட ஞானம்பாளின் மனம் மிக்க வேதனையடைந்தது. அவளுக்கிருந்த நம்பிக்கை யடியோடு போய்விடும்போல் ஒரு விநாடி தோன்றியது. ஆனால் மறுவிநாடி அவள் மனதின் அந்தரங்க ஆழத்தி லிருந்து "உன் வரையில் நேரில்கண்டு உன் மனச்சாட்சி சொல்வதை நம்பு'' என்று ஒரு சத்தம் புறப்பட்டது போல் அவளுக்குத் தோன்றியது.

அவள் நீலாட்சியை நோக்கி "இருக்கட்டும்-எப்படி யிருந்தாலும் அவளைக் காண்பதில் ஒரு குற்றமுமில்லை. என் உள்ளத்தில் ஏதோ ஒரு உணர்ச்சி யுண்டாகி யிருக் கிறது. அதை யெப்படி வெளியிடுவதென்று எனக்குப் புலப்படவில்லை. அவளை நேரில்கண்டு பேசினாலே என்

மனம் சாந்தமடையும். நான் அங்கு செல்வதற்கே வந்தேன். துணைக்கு யாருமில்லையாகையால் உன்னை யழைத்துச் செல்லலாமென்று நம்புகிறேன். தயவுசெய்து வருகிருயா?" என்ருள்.

நீலாட்சி:-"அய்யோ போலீஸ் ஸ்டேஷன் என்பதே என் மனதிற்கு மிக்க வெறுப்பை யுண்டாக்குகிறது, மன்னிக்கவேண்டும்" என்று கூறினாள். ஆனால் மறு விநாடியே அவள் மனதில் ஏதோ யோசனை தோன்ற "ஆனால் நீ யவசியம் போயே தீரவேண்டுமெனின் துணையின்றிச் செல்லலாகாதாகையால் நான் வரவேண்டியதே" என்று சிந்தனையோடு கூறினாள்.

ஞானம்பாள் நீலாட்சிக்கு வந்தனமளித்தாள். அதன் பிறகு இருவரும் அங்கிருந்து நியாயஸ்தலத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். இருவரும் வீதிகளின்வழியாகச் செல்லும்போது மிக்க அழகிய ஜதையாகத் தோன்றினர்கள். இருவரும் நேர்த்தியான அழகுடையவர்கள். நீலாட்சி சற்று உயரமானவள். அவள் முகவிலாசத்தில் கூரிய பார்வையும், தான் காண்போர் மயங்கத்தக்க அழகுடையவளென்பதை யுணர்ந்து பெருமைகொண்டிருக்கும் உணர்ச்சியும், மனதின் கடினத் தன்மையும் நன்கு தோன்றின. ஞானம்பாளின் முகத்தில் களங்கமற்ற உள்ளமும், கருணையும், பெருந்தன்மையான சுபாவமும், அறிவின் பிரகாசமும், அடக்கம் பொறுமை இரக்கம் முதலியவைகளும் குளிர்ந்த பிரகாசத்தை யுண்டாக்கி யிருந்தன.

இவர்கள் மூன்றுமணிக்குப்பின் நியாயசபைபோய்ச் சேர்ந்தார்கள். அப்போதும் அங்கு வெளியில் கும்பல் அதிகமாகவே யிருந்தபடியால், இவர்கள் சற்றுஎட்டவே யிருந்து வாயிற்படியிலிருந்த ஒரு போலீஸ்காரனைக் கூவி யழைத்தார்கள். நல்லகாலமாய் அவன் காலையில் ஞானம்

பாள் வீட்டிற்குச் சென்றிருந்த அதேயாளாக விருந்தான்.

போலீஸ்காரன் இவர்களருகில் வந்ததே நீலாட்சி ஆவலோடு அவனை நோக்கி "அய்யா! விசாரணையில் என்னென்ன சங்கதிகள் வெளியாயின?" வென்று வினவினாள். போலீஸ்காரன் சுருக்கமாகச் சங்கதியைக்கூறி, "பிரதம நியாயசபைக்கு இது அனுப்பப்படும்" என்றான்.

இதைக் கேட்டதே ஞானம்பாள் மிக்க வியாகூலப் பட்டாள். போலீஸ்காரன் "அம்மா! நீங்கள் உள்ளே வாருங்கள், இன்னும் இங்கிருந்தால் இச்சனங்கள் வந்து உங்களைச் சூழ்ந்துகொள்வார்கள்" என்றுகூறி இருவரையும் நியாயாதிபதியின் அறை யிருக்குமிடத்திற்குக் கட்டிடத்தின் பின்பக்கமாக அழைத்துச் சென்றான். வாயிற்படியில் நுழைந்ததே கதவை மூடிவிட்டான். அச்சமயம் ஞானம்பாள் அவன் கரத்தில் இரகசியமாக ஒரு சவரனை யளித்தாள்.

அங்கிருந்து இவர்கள் தாழ்வாரத்தின் வழியே செல்லும்போது நீலாட்சி "கொல்லப்பட்டவளைப்பற்றி ஏதேனும் விவரம் தெரிந்ததோ?" என்றாள்.

"அம்மா! நாங்கள் தீரவிசாரித்ததில் அக்கிழவி இப்படிப் பன்முறை குரூரமாகக் கொலை செய்யப்பட்டாலும் பாபமில்லை யென்று தெரிகிறது. ஏனெனில், அவள் யோக்கியதை பயங்கரமானதாக விருக்கிறது. அவளால் எத்தனையோ பேர் அழிக்கப்பட்டு எத்தனையோ கன்னிகைகள் அனாதைகளாய் அலைகிறார்கள்போல் காண்கிறது: அவள் வாசம்செய்துகொண் டிருந்த வீதியோ! கடவுளே! இந்நகரத்திலுள்ள வீதிகளில் மிக்க அயோக்கியதையான பெயர்பெற்ற வீதி" என்றான்.

நீலாட்சி:—அத்தகைய வீதிகூட இருக்கிறதா? அது எது?

போலீஸ்:—"கள்ளத்தெருவில் முப்பதாவது நம்பர் வீட்டில் ஒருபெயர்பெற்ற அயோக்கியஸ்திரீயிருக்கிருள். அவ்வீடு அவளுடையதே. அதில்தான் இவள் வசித்துக்கொண்டிருந்தாள்" என்ருன்.

அச்சமயம் நீலாட்சி "அப்பா! கடவுளே கடவுளே! இது எப்படிப்பட்ட அனுசாரமானவிடம்! என்ன சுருட்டுப் புகையின் நாற்றமும் சாராயநாற்றமும் அப்பப்பா! இங்கு இருந்தால் சற்று நேரத்திற்குள் சகிக்கமுடியாத நரகவேதனையாகத் தோன்றும்" என்ருள்.

ஞானம்பாள்:—"அய்யோ பாபம்! உண்ணுமுலை யெவ்வளவு வேதனை யடைவாள்!" என்று பரிதாபமாகக் கூறினுள்.

நீலாட்சி இதற்குப் பதில்கூற அவகாசம் இல்லை. ஏனெனில் அதற்குள் உண்ணுமுலை யிருக்கும் அறையை நெருங்கிவிட்டார்கள்.

உண்ணுமுலை அந்த அறையின் ஒரு மூலையில் இருந்த ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு சிரசை ஒரு கரத்தின் மேல் சாய்த்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையி லிருக்கிருள். முகக்குறியால் அவள் மனதில் பெருந்திகிலும், கலவரமும், சந்தேகமும் ஏக்கமும் இருப்பதாகத் தோன்றின. அச்சமயம் அறையில் நடப்பது இன்னதென்றேனும், தான் எங்கிருப்பதென்பதேனும் அவளுக்கு உணர்ச்சியில்லை. கடலில் முழுகிவிட்டவள்போல் இருக்கிருள். இதனுல் அறைக்குள் யார் வந்திருப்பவர்களென்பதையவள் உணரவேயில்லை.

போலீஸ்காரன் அவளருகிற் சென்று "அம்மா! இரண்டு சீமாட்டிகள் உன்னைக்காண வந்திருக்கிருர்கள்" என்ருன். அது அவள் செவிகளில் விழவேயில்லை. சற்று உரத்த சத்தமாக "உன்னைத்தானம்மா! யாரோ இருவர்

உன்னைக்காண வந்திருக்கிறார்கள்" என்றான். அப்போதும் அவள் தலை நிமிர்த்திப் பார்க்கவேயில்லை.

இதைக் கவனித்துக்கொண் டிருந்த ஞானம்பாள் போலீஸ்காரனை நோக்கி "பாபம் அவள் திடுக்கிடும்படிச் செய்யவேண்டாம். நிதானமாய்க் கூறலாம்" என்றாள்.

குயிலின் இனிய குரல்போன்ற ஞானம்பாளின் இரக்கமான மொழிகள் உண்ணாமுலையின் செவிகளில் வீழ்ந்ததே அவள் திடுக்கிட்டுப் பார்த்தாள். இதுகாறும் அந்த விடத்தில் முரட்டுத்தனமும் அதிகார தோரணையுடையவுமான மொழிகளே அவள் செவிகளில் வீழ்ந்தனவன்றி சாந்தமும் இரக்கமுமான மொழிகள் விழவேயில்லை. அதோடு ஞானம்பாளின் குரலும் அவளுக்குத் தெரிந்தது. புதுவித நாதமும் தெரிந்த குரலும் செவிகளில் வீழ்ந்ததே தலை நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் நிற்பவர்களைக் கண்டாள். ஞானம்பாள் முகத்தைக் கண்டதும் அவள் முகத்தில் ஒருவித மாறுதலும் பிரகாசமும் தோன்றின. அவள் உடனே எழுந்து மிக்க நன்றியைக் காட்டும் தொனியோடும் வணக்கத்தோடும் "ஆ! இது மிக்க தயவு மிக்க தயவு! மிக்க கருணை!" என்று கூவினாள்.

ஞானம்பாள் கண்களில் நீர் துளிக்க "ஓ! உண்ணாமுலை! உண்ணாமுலை இதோ பார் - வானத்தைப் பார்! கடவுள் முன் நிற்பதாகக் கருதிக்கொண்டு நீ குற்றவாளியல்லவென்று ஒரு வார்த்தை கூறு!" என்றாள்.

உடனே உண்ணாமுலையின் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் ஜொலித்தது. அவள் தைரியத்தோடு தடுமாற்றமேயின்றி நிமிர்ந்து நின்று ஞானம்பாள் முகத்தை யுற்று நோக்கி "ஓ! அம்மா என் சொல்லை நம்பு. பூரணமாக நம்பு. கடவுளறிய நான் நிரபராதி" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே ஞானம்பாள் மிக்க சந்தோஷமடைந்து "ஆ! நான் நம்புகிறேன் - நம்புகிறேன்!" என்று கூறிக்கொண்டே முன்சென்று உண்ணாமுலையின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டாள். பிறகு ஞானம்பாள் அவளை நோக்கி "இதோ என்கூட வந்திருப்பது நீலாட்சி என்ற என் சிநேகி" என்றதும் தட்டென்று நின்றாள். ஏனெனில் அச்சமயம் உண்ணாமுலை நீலாட்சியைச் சற்று வெறுப்பும் கோபமுமான பார்வையோடு உற்றுநோக்குவதைக் கண்டாள். அச்சமயம் நீலாட்சியின் முகம் கடுகடுப்பாகத் தோன்றியதோடு, ஞானம்பாள் உண்ணாமுலையை நிரபராதியென்று நம்புவதாய்க் கூறியதும், அவள் கரத்தைப் பற்றிக்கொண்டதும் சற்றும் தன் மனதிற்குப் பிடிக்காது வெறுப்படைந்ததாகத் தோன்றியது. ஞானம்பாள் மிக்க வியாகூலமுற்றாள்.

உண்ணாமுலை ஞானம்பாளை நோக்கி நீலாட்சியைத் தன் கண்களால் சுட்டிக்காட்டி,

"இந்தம்மாள் நான் குற்றவாளியென்றே நம்புவதாகத் தோன்றுகிறது. ஆயினும் நான் அதற்கு வியப்படையவில்லை. ஏனெனில் என்மேலுள்ள சந்தர்ப்ப சாட்சியங்கள் அத்தகையனவாக விருக்கின்றன. அத்தகைய சாட்சியங்களின்முன் ஒருவர் என்னைக் குற்றவாளியல்லவென்று கருதுவது மிக்க கஷ்டமே" என்றாள்.

ஞானம்பாள் நீலாட்சியை நோக்கி "நீலாட்சி! நீ அவ்வாறு நினைப்பது தகுதியல்ல. சே சே அது அவளுக்குத் தீங்கிழைப்பதாகும்" என்றாள். நீலாட்சி "நான் அப்படி அவசரமாக அபிப்பிராயப்பட்டதாயின் அதற்காக விசனிக்கிறேன். ஆயினும் இப்போது நாம் சிநேக பாவமாக இங்கு வந்ததால், தான் அதற்குத் தகுதியுடையவளே யென்பதைக் காட்டுவதற்காக உண்ணாமுலை

தன்மேல் ஏற்பட்டிருக்கும் விரோதமான சாட்சியங்களைப் பற்றிய விவரத்தை நமக்கு அறிவிக்கலாமல்லவா?" என்றாள்.

அச்சமயம் இன்னொருவர் அங்கு வந்தார். அவரைக் கண்டதும் போலீஸார் வணக்கத்தோடு வந்தனமளித்து சற்று விலகி நின்றார்கள். அவர்களால் வந்தவர் பாரிஸ்டர் வரதப்பிள்ளை யென்று ஞானம்பாள் அறிந்துகொண்டாள். உண்ணாமுலை யவரைக் கண்டதும் மிக்க நன்றியோடு முன்சென்று "ஓ அய்யா! தாங்கள் கருணையோடு என்னைக் காப்பாற்றும் தொழிலை யேற்றுக்கொண்ட நன்றியை நான் என்றும் மறவேன்—ஆ! கடவுளறிய நான் நிரபராதி. என் வார்த்தையைத் தயவுசெய்து நம்புங்கள்" என்று கூறிக்கொண்டே அவர் பாதங்களில் பணிந்தாள்.

அதைக் கண்ட ஞானம்பாள் மிக்க மனங்கனிந்து அவளருகிற் சென்று குனிந்து அவளைத் தூக்கி "அம்மா தயவுசெய்து இவரிடம் எல்லாவற்றையும் கூறிவிடு. இவர் உனக்காக இவ்வளவு அக்கரையாய்ப் பாடுபடுகிறவர். மேலும் உன் க்ஷேமத்திற்காகவே நீ அவருக்கு யாவும் கூறவேண்டும்" என்றாள்.

பாரிஸ்டர்:—"ஆம். இங்கிருக்கும் நீங்கள் சிநேகிதர்களே என்று தெரிகிறது. இந்தப் போலீஸ்காரன் இரகசியத்தை வெளியிடக்கூடாதவன். ஆகையால் தாராளமாகக் கூறலாகும்" என்றார்.

உண்ணாமுலை ஞானம்பாளை நோக்கி "அம்மா! உங்கள் வார்த்தைப்படிக் கட்டாயம் நடந்துகொள்கிறேன்" என்று கூறி, பாரிஸ்டரை நோக்கி, "ஆம் நான் தங்களிடம் யாவும் கூறிவிடவேவேண்டும். கூறவே போகிறேன்" என்று கூறிவிட்டு வந்திருக்கும் மாதர்களையும் போலீஸ்காரனையும் நோக்கினாள்.

உண்ணுமுலையின் நோக்கத்தைக் கண்ட ஞானம்பாள் "நாங்கள் இருப்பது இடையூருக விருப்பின் நாங்கள் போய்வருகிறோம்" என்ருள்.

நீலாட்சி:—"அதென்ன? நாம் சினேகராக வந்திருக்கிறோம். நம்முன் கூறத் தடையென்ன? மிக்க அவசியமான சமயத்தில் சினேகமும் அன்பும் காட்டுகிறவர்களுக்குத் தான் பிரபராதி யென்றும் அவர்கள் நட்பிற்குப் பாத்திரமானவளென்றும் காட்டுவதற்காக உண்மையான விவரத்தைக் கூறவேண்டு மல்லவோ?" என்ருள்.

இம்மொழிகளைக் கேட்ட ஞானம்பாள் அவள் பெருமையோடும் கடின நெஞ்சோடும் கூறுகிருள் என்று வியாகூலமடைந்தாள். உண்ணுமுலை பாரிஸ்டரை நோக்கி, "நான் தங்களுக்கு யாவற்றையும் ஒளிக்காமல் கூறுகிறேன். ஆனுல் நான் தங்களிடம் தனியாய்க் கூறவேண்டும்" என்ருள்.

நீலாட்சி ஒரு மாதிரியாகத் தலையசைத்தாள். பாரிஸ்டர் ஞானம்பாளை இரண்டடி எட்ட அழைத்துக்கொண்டு போய் "அம்மா! என் நீண்ட அனுபவத்திற்குத் தெரிந்தமட்டில் இத்தகைய சந்தர்ப்பங்களில் குற்றவாளிகள் தங்கள் மனதில் இருப்பதைத் தங்கள் வக்கீலிடம்தான் தாராளமாக மனம் விட்டுக் கூறுவார்கள். ஆனுல் அதை நன்றியற்ற குணமாகவாவது, அதனுலேயே அந்த ஆள் குற்றவாளி யென்ருவது கருதலாகாது." என்ருர்.

ஞானம்பாள்:—"ஆம். தாங்கள் கூறுவது உண்மையே. ஆயினும் தயவுசெய்து ஒரு விஷயம் கேட்கிறேன். அதை அதிகப் பிரசங்கித்தனமாகக் கருதலாகாது. தங்களபிப்பிராயமென்ன? அவள் குற்றவாளி என்று கருதுகிறீர்களா? இல்லையா?" என்ருள்.

பாரிஸ்டர் வரதப்பிள்ளை ஞானம்பாளை இன்னும் சற்று எட்ட அழைத்துச்சென்று அவள் செவிகளில், "அம்மா! நான் என் மனப்பூர்வமாக அவள் நிரபராதியே யென்று நம்புகிறேன். நீ இப்பரிதாபமான கன்னிகையின் விஷயத்தில் இவ்வளவு அன்பு காட்டுவதற்காக உன் குணங்களைப்பற்றி நான் மிக்க புகழ்ச்சி யடைகிறேன். உன் பெருந்தன்மையான குணத்தை நான் உணர்ந்தேன். ஆகையால் உன்னிடம் இதைப்பற்றிய விஷயத்தைக்கூற விரும்புகிறேன். அதாவது, இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. இக் கன்னிகைக்கு உதவி செய்ய விரும்பி என்னை யமர்த்தியவர் மிக்க யோக்கியமான பெரிய மனிதர். அவர் இவள் நிரபராதியே யென்று எவ்வளவோ உறுதியாகக் கூறுகிறார். நானும் அதை நம்புகிறேன். இனி நீங்கள் பேசாமல் நழுவி விடுங்கள். அவள் இப்போதிருக்கும் மனோ நிலைமையில் நீ அவளைப் பிரிந்துபோவது தெரியாமலே யிருப்பது நலம்" என்றார்.

ஞானம்பாள் அவ்வாறே செல்வதற்காக நீலாட்சியை நோக்கியபோது அவள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருப்பதைக்கண்டாள். இச்சமயத்தில் இவளுக்கு என்ன சிந்தனை யேற்பட்டது? நமது கதையே போகப்போக அதை வெளியிடும். சற்று நேரங்கழித்து ஞானம்பாள் நீலாட்சியின் தோளைத் தட்டியதும் அவள் திடுக்கிட்டு எழுந்தாள். உடனே இரண்டு மாதர்களும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

பாரிஸ்டர் பிறகு உண்ணாமுலையிடம் சென்று "அவர்கள் போய்விட்டார்கள். நான்றான் உன்னைக் காணாமலே போய் விடும்படி யவர்களுக்குக் கூறினேன். அவர்கள் இருவரில் ஞானம்பாள் உன்மேல் மிக்க அன்

புள்ளவளாகவும் நல்லவளாகவும் தெரிகிறது. இனி நீ யுன் சங்கதிகளைக் கூறலாம்'' என்றார்.

உண்ணுமுலை அவரை நோக்கி "ஆம். நான் யாவும் கூறுகிறேன். ஆனல் என்னைக் காப்பாற்றுவதற்குக்கூட தாங்கள் அதை வெளியிடலாகாது. ஒரு சம்பவம் நேரிட்டால் மட்டும்—அச்சம்பவம் வெகுவாய் நேரிடும்—இதை வெளியிடலாம். அவ்வாறே தாங்கள் இதைத் தங்கள் மனதிலேயே வைத்துக்கொண் டிருப்பதாயின் அதைக் கூறுகிறேன்'' என்றாள்.

பாரிஸ்டார் சற்றுநேரம் சிந்தித்தார். "இதில் ஏதோ விசேஷ மிருக்க வேண்டும். அந்த இரகசியம் வெளியாவதைவிட நாம் குற்றவாளி யென்றே தீர்மானிக்கப் பட்டு மரணதண்டனை யடைவதாயின் அடைவோம். என்று இவள் துணிந்திருக்கிறாள். இவள் மிக்க பெருந் தன்மையும் கம்பீரமுமான குணமுடையவளாக இருக்க வேண்டும். இவள் நேரிடக்கூடும் என்கிற சம்பவம் என்னவோ. எப்படி யாயினும் நாம் எல்லா சமாசாரங்களையும் அறிந்து கொள்ளவேண்டும்'' என்று தமக்குள் தீர்மானித்துக்கொண்டு. உண்ணுமுலையை நோக்கி,

"அம்மா நான் நீ கூறியபடி வாக்களிக்கிறேன். இதைப் பரம இரகசியமாகவே வைத்துக்கொண் டிருப்பேன். நீ கூறும் சந்தர்ப்பம் நேர்ந்தால் மட்டுமே உன்னைக் காப்பாற்ற வேண்டியதற்கு அவசியமானதை மட்டும் வெளியிடுவேன்'' என்றார்.

அதன்மேல் உண்ணுமுலை அவர் கோரியபடி அவர் அருகில் சென்று உட்கார்ந்தாள். அவர் சமிக்கை செய்ததே போலீஸ்காரனும் வெளியில் போய்விட்டான். அதன் பிறகு உண்ணுமுலை தன் சங்கதிகளை யெல்லாம் உண்மைப்படி ஒன்றையேனும் ஒளிக்காமல் கூறினாள்.

பாரிஸ்டர் மிக்க கவனமாக யாவும் கேட்டுக்கொண்டார். ஆனால் அவற்றை வெளியிடுவதற்கு இச் சந்தர்ப்பம் நமக்கு அனுகூலமாக இல்லை. ஆகையால் இதை இப் படியே விட்டுவிட்டு கதையைத் தொடர்ந்து செல்வோம்.

21-வது அத்தியாயம்.

காதல் வஞ்சமாக மாறுகிறது.

மேல்கண்ட சம்பவங்கள் நடந்த அதேதினம் இரவு எட்டு மணிக்கும் ஒன்பது மணிக்குமிடையில் நகரத்திலுள்ள கள்ளத்தெரு என்ற வீதியில் ஒரு ஸ்திரீ சென்றுகொண் டிருக்கிறாள். அவள் நாணயமான உடை யணிந்திருக்கிறாள். ஆனால் கருத்த தடித்தபட்டுச் சீலை யில் தைக்கப்பட்ட முகமூடி யணிந்துகொண் டிருக்கிறாள். கள்ளத்தெருவு என்பது அப் பெயருக்குத்தக்க விதமான யோக்கிதை யுடையதே. அதைப்பற்றி போலீஸ்காரன் நீலாட்சியிடம் கூறியதை நாம் மறுபடி கூறுவது அனு வசியம். அம்மாது அவ்வீதியிலுள்ள வீடுகளின் இலக் கங்களைப் பார்த்துக்கொண்டே சென்று கடைசியில் ஒரு வீட்டின் கதவைத் தட்டினாள். உடனே யொரு வேலைக் காரி வந்து கதவைத்திறந்து அம்மாதை யழைத்துக் கொண்டுபோய் ஒரு அறையில் உட்கார வைத்து "அம்மா! தாங்கள் இங்கு யாரையேனும் சந்திக்க வந்து அவர்கள் வரவிற்கு எதிர் பார்க்கிறீர்களோ?" என்றாள்.

வந்தமாது "இல்லை யில்லை. நான் இந்த வீட்டின் சொந்தக்காரியைக் காணவே வந்தேன்" என்றாள். வேலைக்காரி அப்படியாயின் இதோ அனுப்புகிறேன்" என்று கூறிச் சென்றாள். வந்தவள் நின்றுகொண்டே யிருந்தாள். இரண்டொரு நிமிடங்களில் வீட்டுக்காரி

அம்மாதிடம் வந்தாள். வந்தவள் வீட்டுக்காரிக்குத் தான் அதிக வயதுடையவள்போல் காணப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு அதற்குத் தக்கபடி வேடமணிந் திருக் கிருள்.

வீட்டுக்காரி வந்த மாதைக் கண்டதும், அனுபவ முடையவளாதலால், வந்திருப்பவள் வாலிப வயதுடைய வளென்றும் நல்ல அந்தஸ்தைச் சேர்ந்தவளென்றும் உணர்ந்துகொண்டு முகத்தைக் காண ஆவல்கொண்டாள். ஆனல் முகமூடியால் அது முடியவில்லை. ஆயினும் இருக் கட்டுமென்று மிக்க மரியாதையோடு "அம்மா உட்காருங் கள். ஏதேனும் சிற்றுண்டி யருந்துங்கள்" என்று உப சரித்தாள்.

வந்த ஸ்திரீ "வேண்டாம் அம்மா. நான் உன்னிடம் ஒரு வேலையாக வந்தேன். அவ்வேலை ஐந்தாறு நிமிடங் களுக்குமேல் செல்லாது. ஆயினும் அந்த காலத்தை நீ எனக்காகச் செலவழிப்பதற்காக இதோ இதை வாங் கிக்கொள்" என்று அவள் கையில் ஆறு சவரன்களை யளித்தாள்.

வீட்டுக்காரி யப்பணத்தை வாங்கிக்கொண்டு "ஓ! இவளால் நமக்கு நல்ல பணம் கிடைக்கும்போ லிருக் கிறது" என்று சிந்தித்துக்கொண்டு "அம்மா! இத்தகைய உதாரகுணமுள்ள சீமாட்டிக்கு நான் எவ்விதத்தாலும் என்னுலானதைச் செய்யத் சித்தமாக விருக்கிறேன்" என்ருள்.

வந்தவள்:—இரு; நான் சீமாட்டியல்ல. எனக்கு முகஸ் துதி கேட்பதில் விருப்பமில்லை. முன்னுடியே கூறி விடுகிறேன். நான் உன்னிடம் பெறக் கோரிவந்த உதவியை நீ செய்ய விரும்பின் சுலபமாகவே செய்ய

லாம். அதை நீ செய்தால் இப்போது கொடுத்த தற்கு இரண்டத்தனை பரிசளிப்பேன்.

வீட்டுக்காரி:—நான் மனப் பூர்வமாகச் செய்கிறேன்.

வந்தவள்:—நேராய் விஷயத்தைக் கூறுகிறேன். இந்த வீட்டில் தானே நேற்று கொலை செய்யப்பட்ட சின்னம்மாள் என்பவள் வசித்துக்கொண் டிருந்தாள்?

வீட்டுக்காரி:—ஆ! ஆம் பாபம். மிக்க நேர்த்தியான மாது...

வந்தவள்:—சே! இத்தகைய புரளி வார்த்தைகளைப் பேசாதே.

வீட்டுக்காரி:—ஆம். ஆம் தாங்கள் கூறுவது சரியே. அவளைப்போன்ற சுத்த அயோக்கியமான மாது வேறு ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்பது உண்மையான விஷயமே.

வந்தமாது:—"நான் அவள் யோக்கியதையைப்பற்றி பேச இங்கு வரவில்லை. நான் வந்த வேலையைக் கூறுகிறேன் கேள். அக்கிழவி இறந்ததைக் கேட்டதே அவளுடைய பொருள்களை யெல்லாம் எடுத்து பத்திரப்படுத்தி வைத்திருப்பாயென்று கருதுகிறேன்." என்றாள்.

வீட்டுக்காரி:—அம்மா! அவற்றை யின்னவையென்று கூட பாராமல் அப்படியே யெடுத்து வைத்திருக்கிறேன். தாங்கள் அவளுக்குப் பாத்தியமுடையவர்களாயின் அதை ருசுப்படுத்தினுல் அவற்றைத் தங்களிடம் அளிக்க ஒரு தடையுமில்லை.

வந்தவள்:—யார்? நான் அவள் சுற்றமா? கடவுளே! அப்படியிருக்க நேர்ந்தால் உடனே என் உயிரையேனும் போக்கடித்துக்கொள்வேனே யன்றி ஒரு

விஞடிகூட அவளோடு சம்பந்தமுடைய நிலைமையில் உயிர் வாழ்வேனென்று கருதாதே.

வீட்டுக்காரி "அம்மா! நான் எனக்குள் சிந்தித்துக் கொண்டுதானிருந்தேன் ஏனெனில் இவ்வளவு அழகுடைய..." என்பதற்குள், வந்தமாது "சட், முகஸ்துதி வேண்டாம். நான் அழகுடையவளென்று நீ எப்படித் தெரிந்துகொண்டாய்? காணுமலே என் முகஸ்துதி செய்கிருய். அழகிற்குப் பதிலாக வைசூரியால் என் முகம் அழகொழிந்து மிக்க விகாரமடைந்து இருக்கிறது. அதற்கே முகமூடி யணிந்திருப்பது. அக்கிழவிக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை. அவளுடைய சொத்துக்காக நான் வரவில்லை. அவளிடம் ஒரு மூட்டை சவரன்கள் இருந்து நீ அவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு பைசாக்களைப் பதிலுக்கு வைத்துவிட் டிருந்தாலும் அதைப்பற்றி எனக்கு எள்ளளவும் அக்கரையில்லை. அச்சாமான்களில் கடிதங்கள் ஏதேனும் இருந்திருக்கும்." என்றதே,

வீட்டுக்காரி:—அம்மா அக்கடிதங்களில் ஒன்றைக்கூட நான் பிரித்துப் பார்க்கவில்லை.

வந்தவள்:—ஆ! சரி, இப்போது நீ கூறியதால் கடிதங்கள் இருக்கின்றனவென்ற வரையில் ஏற்பட்டது. இது நல்ல விஷயமே. அதை நீ பத்திரமாகவே எடுத்து வைத்திருப்பாய் என்று தெரிகிறது. இப்போது அக்கடிதங்களே எனக்கு வேண்டியவை. உனக்கு அவற்ருல் ஒரு பிரயோசனமுமிராது. அக்கடிதங்களை நீ என்னிட மளித்துவிட்டால் இப்போதளித்ததற்கு இரண்டத்தனை மறுபடி யுனக்களிக்கிறேன்.

வீட்டுக்காரி வந்தவளை யேற யிறங்க நோக்கிஞள். அவள் கூறியபடி அவள் முகம் மிக்க விகாரமடைந்திருக்கிறதென்று வீட்டுக்காரி நம்பவில்லை. ஆகையால் அவள்

முகத்தை யெப்படியேனும் பார்க்கவேண்டுமென்று கருதினாள். ஆனால் முகமூடி யிருப்பதால் முடியவில்லை. அவளைச் சாடையாகப் பார்த்துக்கொண்டே,

"அம்மா ஒரு சிறு கட்டுக்கடிதங்கள் இருக்கின்றன." என்றாள்.

வந்தவள்:—சரிதான் நீ போலீஸாருக்கு அதைப்பற்றிக் கூறவில்லை. கூறியிருந்தால் முன்பே சங்கதி வெளியாகிவிட் டிருக்கும்.

வீட்டுக்காரி:—"நான் போலீஸாருக்குக் கூறவில்லை. முதலாவது அவர்களுக்குக் கொஞ்சம் இடங் கொடுத்தாலும் நமக்கே தொந்திரை கொடுப்பார்கள். இரண்டாவது, அக்கடிதங்கள் பகிரங்கப்படுத்தப்படின் இறந்தவளுக்கு அவமானத்தை யுண்டாக்கத் தக்க விஷயங்கள் அவற்றிலிருக்கலாகும். அவள் முன்னமே அயோக்கிய நடத்தைக்காரியென்று பெயரெடுத்திருக்கிறாள். நாம் அதையேன் இன்னும் அதிகப்படுத்தவேண்டும். மூன்றாவது அக்கடிதங்களில் வேறு மரியாதை யுடையவர்கள் விஷயங்கள் அடங்கியிருக்கலாகும். அக்கடிதங்கள் வெளிவந்தால் அவர்களுக்கெல்லாம் கெடுதியை விளைவிக்கும். இவை யாவும் யோசித்து நான் அவை யிருப்பதை யாரிடமும் கூறவில்லை" என்றாள்.

வந்தவள்:—"ஆ நான் அக்கடிதங்களைக் கேட்பதன் காரணத்தை நீ யறிந்துகொண்டிருப்பாயென்று முன்னமே யுணர்ந்தேன். ஆயினும் இருக்கட்டும். அக்கடிதங்களை யெல்லாம் ஒரு துண்டுகூட விடாமல் என்னிடம் அளித்துவிட்டால் இதோ பணம் நான் கூறியபடி கொடுத்துவிடுகிறேன்" என்று

ஜேபியிலிருந்த பணப்பையை யசைத்து சத்திக்கச் செய்து காட்டினுள்.

வீட்டுக்காரி—“அம்மா! தாங்கள் அக்கடிதங்களைக் கேட்பது தங்களுக்காகத் தானே? வேறே போலீ ஸார் தூண்டுதலால் வந்து...” என்பதற்குள்,

வந்தமாது:—“ஓ பைத்தியக்காரி! என்ன யோசனை செய் கிருய்? நான் போலீஸாருக்காக ஏன் வரவேண் டும்? அவர்கள் என்னை யேன் கூலி கொடுத்தனுப்ப வேண்டும்? அவர்கள் கருதினுல் பத்துப் பேர் களாக வந்து ஏககாலத்தில் உன் வீட்டைச் சூழ்ந்து கொண்டு யாவற்றையும் சோதனை செய்து விடமாட் டார்களா! சேசே! அப்படியொன்றும் பயப் படாதே.” என்றுள்.

இதற்குள் வீட்டுக்காரியின் மனதில் பேராசையென் னும் பேய் பற்றிக்கொண்டது. அவள் தனக்குள் ஏதோ சிந்தித்துக்கொண்டு வந்தவளை நோக்கி,

“அம்மா! அக்கடிதங்கள் உம்முடையனவாகவே யிருக்கலாகும். ஆயினும் நான் யோசிக்கும்போது இத் தகைய விஷயங்களைத் தீர ஆலோசித்துச் செய்வதே நலம் என்று தோன்றுகிறது. ஆகையால் தாங்கள் நாளைக்கு வந்தால் நான்இதைப்பற்றி விடை யளிக் கிறேன்” என்றுள்.

வந்தமாது முட்டாளல்ல. புத்தி சாமார்த்தியமும், தந்திரமும், தைரியமும், துணிகரமுமுடையவள். அப் படிக்கின்றேல் அயோக்கியத்தனத்திற்குப் பிரசித்தி பெற்ற அந்த வீதிக்கு அந்த இரவில் அவள் செல்லத் துணியவேமாட்டாள். அவள் வீட்டுக்காரியை நோக்கி,

“உன் யோசனையை நான் அறிந்துகொண்டேன். நீ அதிகமாகப் பணம் பறிக்க உத்தேசித்திருக்கிருய்.

இருக்கட்டும். இப்போது அவளிடமிருக்கும் என் கடிதங்கள் வெளி வந்தால் அவற்றில் எனக்குக் கெடுதி செய்யத்தக்க விஷயங்கள் இருக்குமென்று நான் கருதவில்லை. எதற்கும் எச்சரிக்கையாக விருப்பது நலமென்றே யிவ்வாறு செய்யக் கருதியது. அவை யப்படி வெளிவரினும் என்னை யவ்வளவாகப் பாதியா. நான் உனக்கு இப்போது தாராளமாகவே யளிக்கிறேன். நான் ஒரே துணிகரமுடையவள். ஆகையால் ஒரே தீர்மானமாய்க் கூறுகிறேன். இந்த நிமிடமே அக்கடிதங்களைக் கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதாயின் பெற்றுக் கொள். இன்றேல் இனி எப்போதும் இல்லை. மறுபடி நான் இங்கு வரேன். ஒரே வார்த்தை" என்று கூறி விட்டுத் திரும்ப முயன்றாள். வீட்டுக்காரி பார்த்தாள் "ஒகோ இவள் துணிகரமுடையவள். இவள் நம்மிடம் ஏமாறமாட்டாள்" என்று உணர்ந்துகொண்டு, "அம்மா! அப்படியாயின் தங்கள் இஷ்டப்படியே யாகட்டும். இதோ தருகிறேன்" என்று ஒரு அறைக்குச் சென்றாள். வந்தவள் அவள் பின்னாலேயே சென்றாள்.

வீட்டுக்காரி ஒரு அறைக்குச்சென்று அந்த அறையில் விரிக்கப்பட்டிருந்த பாயைத் தூக்கி அதன் கீழிருந்த ஒரு சிறு கதவைத் திறந்து அங்கிருந்த சிறு குழியில் கரத்தைவிட்டு ஒரு கட்டுக் கடிதங்களை யெடுத்து வந்து வந்தவளிடம் அளித்தாள். வந்தவள் உடனே பணத்தை யெடுத் தளித்துவிட்டாள்.

வீட்டுக்காரி இன்னும் இவள் முகத்தை யெப்படியேனும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானங் கொண்டு மிக்க உபசாரத்தோடு "அம்மா! தாங்கள் என்னிடம் சிற்றுண்டி யருந்தாவிடினும் கொஞ்சம் பால் மட்டுமாவது அருந்தி தாகசாந்தி செய்துகொள்ளுங்கள்"

என்று வேண்டினுள். ஏனெனில் பால் அருந்தும்போது மூக்கு மட்டிலுள்ள முகமூடியை யேனும் இவள் நீக்கு வாள், அப்போது பார்த்துக்கொள்ளலாமென்று கருதி னுள்.

வந்தவள் சுலபத்தில் ஏமாறுகிறவளல்ல. அவள் மரியாதைபோடு, "மிக்க வந்தனம், ஒன்றும் வேண்டாம்" என்று கூறிவிட்டுத் திரும்பித் தெரு வாயிற் படியை நோக்கிச் சென்ருள். வீட்டுக்காரி "ஆ! ஆகட்டும், எப்படியாவது உன் பின்னல் ஆளை யனுப்பி யுன் வாசஸ்தலத்தை யறிந்து வரச்செய்து பிறகு உன்னை யாரென்று அறிய என்னுலாகும்" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு இதோ கதவைத் திறக்கிறேன் என்று கூறிக்கொண்டே வந்தவளுக்கு முன் செல்ல முயன்ருள். வந்தவளோ "அம்மா ! வேண்டாம் வேண்டாம். உனக்குத் தொந்திரை வேண்டாம். நான் கதவைத்திறந்து கொண்டு வெளியில் சென்று மூடிக்கொண்டு போகிறேன்" என்று துரிதமாக நடந்து கதவருகிற்சென்று அதிலுள்ள திறவுகோலை வீட்டுக்காரி யறியாதபடி கையிலெடுத்துக் கொண்டு கதவைத் திறந்து வெளிச்சென்றதும் கதவைத் துரிதமாக மூடி வெளித் துவாரத்தில் சாவியைவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு, சாவியை வாயிற்படியில் வைத்துவிட்டு வீதியிலிறங்கி "சரி. இப்போது நீ யாரையேனும் என் பின் அனுப்பி என் வாசஸ்தலத்தை யறிந்து கொள்ளவும் முடியாது" என்று தனக்குத்தானே மெதுவாய்க் கூறிக்கொண்டே நடந்தாள்.

உலக அனுபோக மறிந்தவளாதலால் அந்த வீட்டுக்காரி பின்னல் தன்னிடம் பணம் பறிப்பதற்காகத் தன்னை யாரென்றறிய விரும்புவாளென்றும், அதற்காக இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒருவரைப்பின்னல் அனுப்பி

வாசஸ்தலத்தை யறிந்துகொள்வது அத்தகையோர் வழக்கமென்றும் அம்மாது அறிவாளாதலால், யாவற்றிற்கும் முன் எச்சரிக்கையோடு நடந்துகொண்டாள்.

கள்ளத்தெரு மிக்க நீளமான வீதி. அவ்வீதியும் அதற்கடுத்த இரண்டொரு வீதிகளும் அத்தகைய அயோக்கியமானவைகளே. அங்கு செல்வோரையே காண்போர் யோக்கியதைக் குறைவுடையோராக மதிப்பார்கள். நமது மாது அவ் வீதியின் முக்கால் பாகத்தைக் கடந்தபோது அங்கிருந்த குறுக்கு வீதியிலிருந்து வந்த வாலிபன் ஒருவன் அவள் பின்னுல் பாய்ந்து வந்து சட்டென்று தன் கரத்தால் அவள் இடுப்பைச் சுற்றிப் பற்றிக்கொண்டு, சுத்த போக்கிரித்தனமாய்,

"ஏ குட்டி! எங்கே மிக்க அவசரமாக இந்நேரத்தில்? இந்த முகமூடிக்குள் மறைந்திருக்கும் வதனம், உன் உருவத்திற்குத் தக்க வனப்புடையதாகவே யிருக்க வேண்டும்" என்றுன்.

அம்மாது திடீலென்று நேரிட்ட இத்தகைய சம்பவத்தால் திகிலும் மிக்க மனக்குழப்பமுமே யடைந்திருப்பாள். ஆனுல் அந்த வாலிபன் குரலைக்கேட்டதே அவள் மனதில் அந்த உணர்ச்சிகள் உண்டாகாமல் அவற்றிற்குப்பதில் வெறுப்பும் கோபமும் ஒருவிதச் சந்தோஷமுமே யுண்டாயின. ஆகையால் அவள் "ஹா!" என்று மட்டும் கூறிவிட்டுச் சட்டென்று திரும்பி அவன் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு சற்று எட்ட நின்றுள்.

அவ்வாலிப புருடன் "உன் முகமூடியைத் திற. உன் முகத்தைப் பார்ப்போம். அம்முகம் உன் தேகத்தின் மற்ற உருப்புகளுக்குத் தக்க அழகுடையதாயின்." என்றதே, அம்மாது அவன் தோளைத்தொட்டு என்

கூட வாவென்று சற்று மாறிய குரலாகக் கூறிவிட்டு முன்னே நடந்தாள்.

காம தூர்த்தனுகத் திரியும் அவ்விடன் "ஓகோ இது மிக்க சந்தோஷமான வேடிக்கையாகவே இருக்கிறது" என்று கருதி அவள் பின்னுல் நடக்கலுற்ருன். அம்மாது அவன் தன்னைத் தொடர்ந்து , வருகிருனு வென்று பார்த்துக்கொண்டே நடந்தாள்.

பத்து நிமிடங்களுக்குள் அம்மாது அந்த அயோக்கியமான பிரதேசத்தைக் கடந்து மரியாதையான ஜனங்கள் வசிக்கும் வீடுகளுள்ள வீதியில் நுழைந்தாள். உடனே அங்கு இருந்த ஒரு தீபஸ்தம்பத்தினருகில் நின்று திரும்பிப் பார்த்தாள். தன் பின்னுல் வரும் ஆடவன் பத்தடி தூரத்தில் வருவதைக் கண்டாள்.

மறுநிமிடம் அவ்வாலிபன் அவளருகில்வந்து நின்று "இனி யுன் வதனத்தைக் காட்டலாமே" என்ருன். அம்மாது பதில் ஒன்றும் கூருமல் நிமிர்ந்து நின்று தன் முகமூடியை யெடுத்தாள்.

அவள் முகத்தைக் கண்டதே அவ்வாலிபன் திடுக்கிட்டு "அய்யோ நீலாட்சி ! நீயா?" என்ருன்.

அம்மாது:—"ஆம். கனம் அச்சுதன்பிள்ளை யவர்களே ! நான்தான். நான் தங்களைச் சந்திக்கவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தேன். தற்செயலாக நீயே வந்துவிட்டாய்" என்ருள்.

இப்போது அந்த வாலிபன் நமது ஞானம்பாளிடம் அயோக்கியத்தனமாக நடந்துகொண்டதால் தேவராஜால் அடித்து வீழ்த்தப்பட்ட அச்சுதனே யென்றும், அம்மாது லாயர் தம்புசாமி பிள்ளையின் சகோதரன் புதல்வியாகிய நீலாட்சி யென்றும் நேயர்கள் அறிந்துகொள்வீர்கள். இதுமட்டுமல்ல; நீலாட்சி சின்னம்மாளென்ற கிழவி

யிடம் விசாரித்தது இவனைப் பற்றியே யென்றும் அறிந்து கொள்ளலாம்.

அச்சுதன்:—"பேஷ். சத்தியத்திற்கு மிக்க நேர்த்தியான விடம்" என்று இழிவுபடுத்துவதுபோல் கூறினான்.

நீலாட்சி:—இந்த விடத்தில் என்னைக் கண்டதால் நீ என் நடத்தையைப்பற்றி சந்தேகங்கொண்டு கூறுகிறு யென்று எனக்குத் தெரிகிறது. நான் அத்தகைய அயோக்கிய நடக்கையுடையவளாக ஆய்விட்டதாக வைத்துக்கொண்டால், அதற்குக் காரணம் முதலில் என்னை வஞ்சித்துப் பரிசுத்தமான என் உள்ளத்தில் நஞ்சிட்டதுபோல் என் கற்பை யபகரித்துக்கொண்டு கள்ளன்போல் தலை மறைந்துகொண்ட நீயல்லவோ அதற்குக் காரணம்?

அச்சுதன்:—நீலாட்சி! உன்னை யித்தகைய வீதியில் கண்ட படியால் நான் அவ்வாறு சந்தேகங் கொண்டது சகஜம்தானே! நான் இங்கு சில மத விஷயமான துண்டுப் பத்திரிகைகள் விநியோகம் செய்வதற்காக வந்தேன்.

நீலாட்சி:—சே! இத்தகைய பெரும்புரட்டுப் பேச்சு பேசாதே. நீ செய்யவந்ததாகக் கூறும் செய்கைக்கு நீ இப்போது நடந்துகொண்ட நடக்கை நேர் விரோதமென்பதை யறிந்து பேசு. பேஷ் இத்தகைய நடக்கை யுடையோர்தான் அயோக்கிய நடக்கை யுடையோர்க்கு மதபோதனை செய்யத் தகுதியுடைய வர்கள்; அதிருக்கட்டும், உனது அயோக்கிய நடக் கைக்கு அதிக உதவியாகவிருந்த அம்மாதைப்பற்றி நினைவிருக்கிறதோ?

அச்சுதன்:-ஆ! அந்தச் சின்னம்மாள் என்ற கிழவி; அவள்

தான் மடிந்தாளே. அவளுக்கும் நீ இங்கு வந்ததற்கும் சம்பந்தமென்ன ?

நீலாட்சி:—சம்பந்தமா ? கூறுகிறேன். நீ எழுதிய கடிதங்களில் ஏதேனும் அவளிடம் இராவோ ?

அச்சுதன்:—ஓ! இருக்கலாம். அதைப்பற்றி யென்ன ?

நீலாட்சி:—உனக்கு அதைப்பற்றி யொன்றுமில்லைதான். நீ ஆண்பிள்ளை; அதிலும் செல்வப்பிரபுவின் புதல்வன். ஆதலால் ஒரு யோக்கியமான குலத்திற்பிறந்த கபடற்ற கன்னிகையை யக்கிரமமாக வஞ்சித்து மோசம் செய்துவிட்டு நன்றுய்த் தலைநிமிர்ந்து சபைகளில் பிரவேசிக்கலாம். அது உனக்கு ஒரு அவமானச் செய்கையல்ல. உன் நண்பர்கள் அதற்காக உன்னை அவமதிக்க மாட்டார்கள். நமது நாட்டின் உயர்ந்த நாகரீகத்தின் லக்ஷணம் இப்படியாக விருக்கிறது. அந்தோ! என் போன்ற கன்னிகைக்கு அப்படி யில்லையே. அக்கடிதங்களில் என்னைப்பற்றி வரைந்திருப்பின் அதோடு நான் அழிந்தமாதிரியே தான். என் மானமே யடியோடு போய்விட்டது. என் சிநேகிகள் என்னைவிட்டுப் பிரிந்துவிடுவார்கள். நான் நான்குபேர் யோக்கியமான ஸ்திரீகள் இருக்கும் கூட்டத்தில் சேர்க்கப்படமாட்டேன். ஆகையால் அக்கடிதங்களைக் கைப்பற்ற வேண்டி எவ்வளவோ என் மனதைப் பொறுக்கச்செய்து இத்தகைய அயோக்கியப் பிரதேசத்திற்கு வரவேண்டியதாயிற்று.

இம்மட்டோ, அந்தக் கள்ள வீதியிலுள்ள ஒரு வீட்டிற்குள்ளேயே பிரவேசித்துச் சுமார் இருபது நிமிடம் அங்கிருக்க வேண்டியதாயிற்று. கொலையைப்பற்றி விசாரணை நடந்தவிடத்தில் அக்கிழவி வசித்துக்கொண் டிருந்த

இடம் இன்னதென்று தெரிந்துகொண்டேன். அதன்மேல் அவ்வீட்டிற்குச் சென்று அவ்வீட்டுக்காரிக்குப் பணம் கொடுத்து அக்கடிதங்களை யெல்லாம் கைப்பற்றிக்கொண்டேன். இவ்வளவும் எனக்கு நேரிட்டது யாரால்?

அக்சுதன்:—நீ நகரத்திற்கு எப்போது வந்தாய்?

நீலாட்சி:—நீ அங்கிருந்து வந்தபின் உன்னிடமிருந்து கடிதம் வரும் வருமென்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியில் ஒரு கடிதமும் வரவில்லை. முதலில் எனக்குச் சந்தேகம் மட்டுமே தோன்றியது. வரவர அச்சங்கதி நிச்சயமென்றே யெனக்குப் புலப்பட்டது. பிறகு கடைசியில் இனி நம்புவதில் பயனில்லையென் றறிந்துகொண்டேன். நீ மோசம் செய்துவிட்டா யென்று என் புத்தியிற் பட்டுவிட்டது. இனி அங்கிருந்து பயனில்லை. இதற்கு முன்பே என் பெரிய தாயார் என்னை யிங்கு வந்துவிடும்படியாகப் பன்முறை யெழுதி யிருந்தார்கள். அதன்மேல் நான் இங்கு வந்துவிட்டேன்.

அச்சுதன்:—"இருக்கட்டும், ஒரு கன்னிகை வேறு துணையின்றி சர்வ கலாசாலை யிருக்கும் அந்த இடத்திற் கருகில் இருப்பது தகுதியல்ல. நீ யிப்போது உன் பெரிய தந்தையின் வீட்டிற்கு வந்திருக்கிறாய். அவர் நல்ல செல்வம் பொருந்திய நிலைமையி லிருக்கிறார். அவர் அடிக்கடி நல்ல விருந்துகள் கேளிக்கைகள் நடத்துகிறார். நல்ல செல்வம் பொருந்தியவர்களெல்லாம் அங்கு வருகிறார்கள். அக்கூட்டத்தில் யாரேனும் ஒரு செல்வம் பொருந்திய வாலிபனை யுன் வலையிற் சிக்கச் செய்யலாம்'' என்றான்.

நீலாட்சி:—நீ கூறும் ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு மிக்க அகௌரவமானதே. ஓ! என்னை யிவ்வாறு

அவமானமாகப் பேசக்கூடவா நீ துணிந்துவிட்டாய்?

அச்சுதன்:—“சேசே! உண்மையாகவே நான் அவ்வாறு கருதவில்லை. நீ செல்வம் பொருந்திய யாரேனும் ஒரு வாலிபனை மணம் புரிந்துகொண்டு நிம்மதியாக இருப்பாய் எனக் கூறினேனே யன்றி வேறில்லை” என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே நீலாட்சியின் கண்கள் இரத்தக் கண்களாயின. அவள் அச்சுதனை நோக்கி,

“மறுபடி இத்தகைய மொழிகளை யென் முன் கூறாதே. நீ என்னை யெவ்வளவாய் மதித்திருக்கிறாயென்பது எனக்கு இப்போதுதான் தெரிந்தது. கற்பிழந்த நான், இன்னொரு மனிதனை நான் கற்பழியாப் பரிசுத்தமான கன்னிகை யென்று நம்பச் செய்து ஏமாற்றியவனை மணம்புரிவேனென்று நினைக்கிறாய்? நீ கடவுளறியச் செய்தப் பிரமாணங்களை யெல்லாம் நான் மறந்துவிட்டேன், அவற்றினின்றும் உன்னை விடுவித்து விட்டேன் என்று கருதுகிறாய்? ஒருகாலுமில்லை. ஒருபோதும் அப்படி நினைக்காதே” என்றாள்.

அச்சுதன்:—நீலாட்சி! நீ யிப்போது சிறிய பெண்ணல்ல. உலக அனுபவ மறிந்தவள். பாடசாலையில் வாசிக்கும் ஒரு மாணவன் முதல் முதல் கண் மண் தெரியாது உண்டாகும் காதலால் செய்த வாக்குத் தத்தங்களை எவ்வளவாய் மதிக்கலாகும் என்பது உனக்கு நன்றாய்த் தெரியும். இப்போது நாம் ஒருவர் அபிப்பிராயத்தை யொருவர் நன்றாயறிந்து கொள்ள வேண்டும்.

நீலாட்சி:—உன் அபிப்பிராயத்தையும் கருத்தையும் முடிவாக அறிந்துகொள்ளவேண்டு மென்பதற்காகவே

நான் உன்னைச் சந்திக்க விரும்பினேன். இப்போது நீ கடவுள் முன்னிலையில் பன்முறை கூறி நான் நம்பிய அந்த வாக்குத்தத்தங்களையும் நம்பக மொழிகளையும் பாதுகாத்து அதன்படி நிறைவேற்றக் கருதுகிறுயா? அல்லது, அவற்றை யெல்லாம் காற்றின் மேல் தூற்றிவிட்டு கடவுள் அறியக் கூறிய சத்திய மொழிகளை யெல்லாம் துரும்புக்குச் சமதையென அலட்சியம் செய்துவிடக் கருதுகிறுயா? இவை யிரண்டில் ஒன்றே நான் இப்போது அறிய விரும்புகிறேன்.

அச்சுதன்:—இவையாவும் ஒரு அதிசயக் கதையில் வாசித்தால் மிக்க ஆச்சரியமாகவும் நேர்த்தியாகவுமே தோன்றும். ஆனல் புத்தியோடு யோசிக்கும் இருவர் சம்பாஷணைக்கு இது அவ்விதமாகத் தோன்றுது.

கீலாட்சி:—“சரி. இப்போது நீ பேசுகிற மாதிரியாலேயே, நீ அச்சத்தியத்திற்கு அஞ்சாதவன், கடவுள் முன்னிலையில் கூறிய மொழிகளை யலட்சியமாகக் கருதுபவன், கபடறியாத ஒரு கன்னிகைக்கு நய வஞ்சகமாக ஆசை வார்த்தைகளைக் கூறி அவள் கற்பைக் கவர்ந்துகொண்டு பிறகு ஈ விரக்கமின்றி அவளை நட்டாற்றில் விடுவதை யலட்சியமாகக் கருதும் பரமயோக்கியன் என்று விளங்குகிறது.

ஆயினும் கனம் அச்சுதன் • பிள்ளையவர்களே! மோசம் செய்யப்பட்ட கன்னிகைக்காகக் கடவுளின் தண்டனை யிருக்கிறது என்பதை மறவாதே. உனக்கு ஒரு தங்கை யிருக்கிறுள். அவள் மிக்க அழகுடையவளென்றும் கள்ளங் கபடறியாதவ ளென்றும் நீ அவளை மிகவும் விசுவாசிப்பதாகவும் பன்முறை யென்னிடம் கூறி யிருக்

கிருய். ஆனல் இப்போதிருக்கும் அற்பபுத்தியும், இரக்கமில்லா நெஞ்சும், அக்கிரமத்திற் கஞ்சாக் குணமும், பூரண அயோக்கியத் தன்மையும், கடவுளையே அலட்சியமாகக் கருதும் துஷ்டகுணமும் அப்போது உன்னிடமில்லை. இப்போது எவனேனும் நீ என்னை வஞ்சித்து மோசம் செய்ததது போல், உன் தங்கையைக் கற்பழித்து மோசம் செய்து விடுவானேல்.'' என்றதே,

அச்சுதன் :—''நீலாட்சி இத்தகைய விஷயத்தைப் பற்றி பேச எனக்குப் பிரியமில்லை.'' என்ருன்.

நீலாட்சி :—''ஆ! இது உன் மனதில் உறுத்துகிறது. இதைப் பற்றியே இன்னும் கொஞ்சம் நீ கேட்க வேண்டும். உன் தங்கையை எவனேனும் அப்படிச் செய்து விட்டால், அவன் இரத்தத்தைச் சிந்தி உன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளக் கருதுவாயல்லவா? ஆயினும் உன் தங்கையாகிய ஜீவாம்பாள் அல்லது ஜீவாள் என்பவளைப் போலவே நானும் ஒரு பெண் பிள்ளை. அவள் கற்பும் அவள் கௌரவமும் அவளுக்கு எப்படி சிறந்தனவோ அதே அளவாக என் கற்பும் கௌரவமும் எனக்குச் சிறந்தனவே. அவளுக்குண்டாகும் அகௌரவம் போன்றதே எனக்குண்டாகும் அகௌரவமும்...'' என்றபோது,

அச்சுதன் :—''நீலாட்சி! இத்தகைய மொழிகளை இன்னும் ஒரு விநாடிகூட நான் கேட்கமாட்டேன். நீ எவ்வளவுதான் கூறினும் நான் உன்னை மணம்புரிந்து கொள்வேன் என்று கருதக் கூடிய அவ்வளவு பைத்தியக்காரியாக நீ யிருக்க மாட்டாயென்று நான் நினைக்கிறேன்......'' என்றதே.

நீலாட்சி :—''ஓ! இப்போது உன் அயோக்கியத் தன்மைப் பூராவாக எனக்கு விளங்கிவிட்டது. உன்

மேல் இந்த வினடி வரையில் இருந்த என் அன்பு முழுமையும் வெறுப்பாக மாறிவிட்டது. ஓ! அச்சுதனே! நான் என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வேன் என்று நிச்சயமாக நம்பு - நான் ஒரு வல்லமை யாவது செல்வமாவது இல்லாத பேதைப் பெண் தான். ஆயினும் என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்தில் நான் உறுதியாக நின்று சமயத்தைப் பார்த்துக்கொண் டிருந்தால் எப்படியும் ஒரு சமயம் வாய்க்கும் என்று நம்பு. இன்றைக்கோ நாளைக்கோ ஒரு மாதம் கழித்தோ, ஒருவருடம் கழித்தோ, பலவருடங்கள் கழித்தோ, கடைசியில் அச்சமயம் வாய்த்தேதீரும் என்று நன்ருய் உணர்ந்துகொள். இனி யுன் சத்தியத்திலாவது விசுவாசத்திலாவது நான் எள்ளளவு நம்பகம்கூட வையேன். ஆயினும் கனம் அச்சுதனே! யாவரையும் காக்க ஒரு கடவுள் இருக்கிற வரையில் நீ ஒரு புழுவைக்கூட அக்கிரமமாக நசுக்க முடியாது. அப்புழுவே திரும்பி உன்னைக் கடித்துக் கொல்லும் விஷநாகமாக மாறிவிடு மென்று நம்பு...''

அச்சுதன் :—“நீலாட்சி! இத்தகைய கொடூர மொழிகளால் ஒரு பயனுமில்லை. கடைசியில் நான் இந்த வீண் மிரட்டலுக்கெல்லாம் அஞ்சுகிற ஆசாமியல்ல'' என்று கூறும்படி செய்து விடுவாய்.

நீலாட்சி :—“ஓ! நீ பகிரங்கமாய் என்னை யிகழ்ச்சிசெய்து விரோதியாக்கிக் கொண்டாய். இனி நம்மிருவர்க்கு மிடையி லிருப்பது என்றுமழியா வெறுப்பும் வஞ்சமுமே. உன் பிரியப்படி அப்படியே யிருக்கட்டும். ஒன்று மட்டும் உன்மனதில் நீங்காதிருக்கட்டும். அதாவது நான் என் காதலில் எவ்வளவு உண்மை

யாகவும், பூரணமாகவும், உறுதியாகவும் இருந்தேனோ அவ்வாறே இப்போது என் வஞ்சத்திலும் இருப்பேன் என்று பூரணமாகவும் உறுதியாகவும் நம்பு'' என்று கூறி விட்டதும் அங்கிருந்து துரிதமாக நடந்தாள்.

22-வது அத்தியாயம்.

தகாத நாகரீகத்தால் வருங்கேடு.

அச்சுதன் நீலாட்சி தன் கண்களுக்கு மறையுமட்டும் அவளை நோக்கிக்கொண்டே யிருந்து பிறகு சென்றான். அவள் பயமுறுத்தியதைப் பற்றி அவன் எவ்வளவுதான் அலட்சியமாகக் கருதினாலும் அவனுடைய அந்தரங்கத்தில் மட்டும் கொஞ்சம் கலக்கமாகவே யிருந்தது.

நீலாட்சி நடந்த சம்பவங்களைப் பற்றி மனக்கலக்கத்தோடு சிந்தித்துக்கொண்டே சென்றாள். அக்கலக்கத்தால் ஒருவண்டி பேசி ஏறிக்கொள்ளாமல் நடந்தே செல்கிறோமே என்பதைக் கூட அவள் கவனிக்கவில்லை. ஆயினும் சற்று நேரங்கழித்து "சே! இனி நாம் கலக்கத்தோடும் மனச்சோர்வோடும் இருக்கவே கூடாது. தைரியத்தோடும் துணிகரத்தோடும் தந்திர சாமார்த்தியத்தோடும் வேலை செய்தால்தான் நமது எண்ணம் நிறைவேறும்'' என்று கருதியதும். பூரணத்தைரிய மடைந்தாள். உடனே ஒருவண்டி பேசி ஏறிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தாள். அந்நேரம் மணி பதினொன்றாய் விட்டது.

நீலாட்சி வீடு சேர்ந்ததும் தன் அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டு தான் கொண்டுவந்த கடிதங்களை

யொவ்வொன்றுய் வாசித்துப் பார்க்கத் தொடங்கினுள். அவற்றைப் பார்த்தபோது தான் பணங்கொடுத்து அவற்றை வாங்கிவந்தது மிக்க நல்லகாலமென்று அவ ளுக்குப் புலப்பட்டது. ஏனெனில் அச்சுதன் எழுதிய கடிதங்களில் அடங்கிய விஷயங்களால் தன் மானம் அடியோடு போய்விடத் தக்கதாக விருந்தது. அதோடு அவன் அக்கிழவிக்கு எழுதிய கடிதங்களை வாசித்தபோது, ஆதியிலிருந்தே அவன் தனக்குத் துரோகம் செய்யக் கெட்ட எண்ணம்கொண் டிருந்தான் என்று நன்றுய் விளங்கிவிட்டது. உடனே, அவன் மேல் சரியான வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று தனக்குள் தீர்மானித் துக் கொண்டாள்.

நீலாட்சி எல்லாக் கடிதங்களையும் வாசித்தபின் கடைசி கடிதத்தை யெடுத்தாள். அதன் எழுத்தைக் கண்டதும் மிக்க வியப்படைந்து திடுக்கிட்டாள். ஏனெ னில் அது யாரெழுத்தென்று அறிந்து கொண்டாள். துரிதமாக அதில் எழுதி யிருப்பதை வாசித்தாள். உடனே திடுக்கிட்டாள். அவளுக்குண்டான ஆச்சரியத் திற்கு ஒரு அளவே யில்லை. அதில் எழுதியிருந்த விஷயம் சுருக்கமாகவே யிருந்தாலும் நன்றுய் அவளுக்கு விளங் கியது. உடனே அவள் மனதில் சிந்தனையும் சில நட வடிக்கைகளும் உதயமாயின. "அய்யோ கடவுளே! இப்படியும் இருக்குமா!'' என்று கூறிவிட்டுத் தன் கரத் தின் மேல் சிரசை வைத்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனைக் குள்ளானுள்.

கடைசியில் மனதைத் திடப்படுத்திக்கொண்டு தனக் குச் சம்பந்த மில்லாத கடிதங்களை யெல்லாம் வேறு பிரித் தெடுத்து அவற்றை யெல்லா மழித்து விட்டு தனக்குச் சம்பந்தப்பட்ட கடிதங்களையும், தனக்கு மிக்க வியப்பை

யுண்டாக்கிய கடைசியி லகப்பட்ட கடிதத்தையும் ஒரு கட்டாய்க் கட்டித் தன் பெட்டியில் பத்திரமாக வைத்துக் கொண்டாள். அன்றிரவு அவள் நித்திரை முழுமையும் பயங்கரமான கனவாகவே யிருந்தது.

இப்போது நமது கதயைத் தொடருமுன் நீலாட்சியின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறவேண்டியது அவசியமெனப் புலப்படுகிறது. லாயர் தம்புசாமி பிள்ளையின் சகோதரர் வெளியூரில் வக்கீலாக விருந்து நல்ல பொருள் சம்பாதித்தார். ஆனல் துர் நடக்கையில் மிக்க செலவுடையவரானதால் அவர் இறந்த போது மனைவிக்கும் புத்திரியாகிய நீலாட்சிக்கும் ஒன்றுமே மிச்சமில்லை. இறந்தவர் அத்தகைய செலவாளியாக விருந்ததால் தம்புசாமி பிள்ளை ஏழ்மை நிலையிலிருந்தபோது அவனுக்கவர் உதவி செய்யவில்லை. தம்புசாமி பிள்ளையின் மனைவிக்குத் தங்கையே நீலாட்சியின் தாயார். நீலாட்சியின் தந்தை யிறந்தபின் அவளுடைய சுற்றத்தார் சிலர் அவளுக்கும் அவள் தாயாருக்கும் ஜீவனத்திற்குப் போதுமான பொருள் உதவி செய்துவந்தார்கள். அவள் வாசிப்புக்கும் அவர்களே யுதவி வந்தார்கள். அப்போதே சுற்றத்தாரில் சிலர் நீலாட்சியைத் தங்கள் வீட்டிற்கே வந்துவிடும்படி எழுதினர்கள்; தம்புசாமி பிள்ளையின் மனைவியும் அவ்வாறு எழுதி யிருந்தாள். தங்களுக்குச் சந்ததி யில்லாத்தால் நீலாட்சியையே தத்து புத்திரியாக எடுத்துக் கொள்ளலாமென்பது அவள் கருத்தாகும்.

நீலாட்சிக்கு இருபது வயதானபோது அவள்தாய் இறந்துபோனள். அம்மாது சிக்கனக்காரியாதலால் தன் சுற்றத்தார் அனுப்பியவற்றை முழுமையும் செலவழித்து விடாமல், தன் புத்திரிக்கென்று கொஞ்சம் மிச்சம் பிடித்து வைத்துக்கொண் டிருந்தாள். இதனல் தன்

தாயார் இறந்தபோது நீலாட்சி தன் தாயின் பெட்டியில் சுமார் ஆயிரம் பவுன் வரையில் இருக்கக்கண்டாள். அதனால் சுற்றத்தார் ஒருவரிடமும் செல்லாமல் நாம் கொஞ்சகாலம் தனியாகவே யிருக்கலாமென்று எண்ணி சர்வ கலாசாலையுள்ள அந் நகரத்திலேயே யிருந்து வந்தாள்.

அங்குள்ள சர்வ கலாசாலையில் வாசிப்பதற்காகப் பல நகரங்களிலிருந்தும் வாலிபர்கள் வந்து அங்கு வசித்துக்கொண்டிருப்பார்கள். விசேஷமாக செல்வம் பொருந்திய பிரபுக்களின் புத்திரர்களும், வர்த்தகர்களின் புத்திரர்களும், விசேஷ பூமியுடைய விவசாயிகளின் புத்திரர்களுமே அங்கு வாசிக்க வருவார்கள். அத்தகைய மாணவர்களோடு எக் கன்னிகையேனும் சினேகம் செய்வாளேயாயின் அவள் நடக்கையைப்பற்றி காண்போர் சந்தேகிப்பார்கள். இத்தகைய விஷயங்களைப்பற்றி நீலாட்சியின் தாயார் அவளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறாள்.

இவ்வாறிருக்கும் சமையத்தில் நீலாட்சி அங்கு வாசிக்க வந்திருந்த கனம் அச்சுதனுக்கு எப்படியோ அறிமுக மாகிவிட்டாள். இவர்கள் அடிக்கடி தனியாகச் சந்தித்து வந்தார்கள். நீலாட்சி தனியாக வசிப்பதால் ஒரு பிரமச்சாரி அவள் வீட்டிற்கு வரத்துப்போக்காக இருந்தால் அவளுக்குக் கெட்ட பெயர் உண்டாகும். ஆகையால் இதற்கென்ன யோசனை செய்யலாமென்று அச்சுதன் கலக்க முற்றுக்கொண் டிருக்கையில் அவனுக்கு அனுகூலமான ஒரு சந்தர்ப்பம் வாய்ந்தது.

அதாவது அதுகாறும் இந்திரபுரியில் வசித்துக் கொண்டிருந்த சின்னம்மாள் என்ற கிழவி அங்கு ஒரு தகாத காரியத்தைச் செய்துவிட்டதால் அக் குழப்பம் அடங்கு மட்டும் அந் நகரைவிட்டு ஓடிவிட நேர்ந்தது.

அதனால் அவள் கலாசாலையிருக்கும் கம்பனூருக்குச் சென்று அவ்வூர் ஓரத்திலிருந்த ஒரு தனியான சிறு குடிசை வீட்டில் வசித்துக்கொண் டிருந்தாள். அச்சுதன் அவளை யொருநாள் தற்செயலாகக் கண்டுவிட்டான். இந்திரபுரியில் இருக்கும்போதே அவள் அவனுக்கு அறிமுகமாகியிருந்தவள். அவள் யோக்கியதையும், அவள் தன் தீய நடக்கைக்கு உதவி செய்வாளென்றும் அவன் நன்றுயறிவான். ஆதலால் உடனே அவளோடு கலந்து பேசி தன் காரியத்திற்கு அவள் உதிவி செய்யுமாறு ஏற்பாடு செய்து கொண்டான்.

அதன் பிறகு அச்சுதன் ஒருநாள் நீலாட்சியைச் சந்தித்து "ஒரு தனி வீட்டில் ஒரு மூதாட்டி யிருக்கிறாள். அந்தம்மாள் மிக்க யோக்கியமானவர்கள், நாம் அங்கு சந்தித்தால் ஒருவரும் அகௌரவமாகக் கருதமாட்டார்கள்." என்று தந்திரமாகக் கூறி மயக்கி அக் கன்னிகை தன்னை யங்கு வந்து சந்திக்கும்படிச் செய்தான். தான் அங்கு நீலாட்சியைச் சந்திக்கக் கருதும்போதெல்லாம் அக்கிழவிக்குக் கடிதம் எழுதுவான். அவள் பக்குவமாக உடனே நீலாட்சியின் வாசஸ்தலத்திற்குச் சென்று சங்கதியைக் கூறுவாள்.

இவ்வாறே அடிக்கடி இருவரும் அங்கு சந்தித்தார்கள். கள்ளங் கபடறியாத அக் கன்னிகை ஒரு சூதையுமறியாமல் இருவர் மேலும் பூரண நம்பிக்கை வைத்துவிட்டதால் அவனுடைய மாய வலையில் சிக்கி கடைசியில் தன் கற்பை யவனிடம் பறி கொடுத்தாள். அதன் பிறகு அவன் அடிக்கடி சீக்கிரத்தில் அவளை மணம் புரிந்து கொள்வதாக உறுதி மொழி கூறிக்கொண்டே யிருந்தான்.

இவ்வாறிருக்கையில் அக் கிழவியைப் பிடிக்க இரத்னபுரியிலிருந்து ஆட்கள் வந்து விட்டார்கள். இதை யறிந்த

பின்பே யவள் அங்கிருந்து மறுபடி நகரத்திற்கு ஓடி அந்தப் பிரம்மாண்டமான நகரத்தின் ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டாள். இரண்டொரு மாதங்கள்கழிந்த பின், அச்சுதன் தன் கல்வி முடிந்து நகரத்திற்குச் செல்லும் போது நீலாட்சிக்கு மறுபடி புதிதாகப் பிரமாணங்கள் செய்து கொடுத்து "எனக்கு வயது வந்துவிட்டது; நான் பிரியமான பெண்ணை மணம் செய்துக்கொள்ளலாம். என் தாய் தந்தையருக்குப் பக்குவமாக என் பிரியத்தைக் கூறிப் பார்க்கிறேன். அவர்கள் சம்மதித்தாலாச்சுது. இன்றேல் என் பிரியம்போல் நான் மணம் செய்துகொள்வேன். ஆகையால் நீ எள்ளளவும் சந்தேகிக்க வேண்டாம்?" என்று கூறிவிட்டுச் சென்றான். அவன் நகரத்திற்குச் சென்றபின் அவளுக் கெழுதிய கடிதங்களில் கலியாணம் செய்துகொள்ள ஆலசியமாவதற்குச் சாக்குக் கூறிக் கொண்டே யிருந்தான். நீலாக்ஷிக்கு எள்ளளவும் சந்தேகமே யுண்டாகவில்லை. ஒவ்வொரு சமயம் விவரம் தெரியாத ஒவ்வொரு விஷயத்தில் சந்தேகம் அவள் மனதில் உதித்தது. அச்சமயங்களிலும் அவள் சந்தேகத்தைத் தள்ளிவிட்டு நம்பிக்கையோ டிருந்தாள். ஏனெனில் நம்பிக்கையை விட்டால் என்ன விருக்கிறது? மனம்முறிந்து ஆவிசோர்ந்து விட வேண்டியதே.

ஆயினும் அவள் சந்தேகங்களைக் கிளறவும் அவற்றை யுறுதிப்படுத்தவும் ஒரு சம்பவம் நேர்ந்தது. சின்னம்மாள் என்றகிழவி மறுபடி கம்பனூருக்கு வந்தாள். அப்போது அவனைப்பற்றி சில விஷயங்கள் நீலாட்சியின் செவியில் வீழ்ந்தன. அதன்மேல் அவனைப்பற்றி விசாரிக்கத் தொடங்கியபோது அவனுடைய அயோக்கிய நடக்கைகளியாவும் ஏறக்குறைய நீலாட்சிக்குத் தெரிந்தன. ஆயினும் அப்போதும் அவள் நம்பகத்தோடேயே யிருந்

தாள். கடைசியில் அச்சுதனிடமிருந்து கடிதம் வருவது நின்றுவிட்டது. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள்மாதங்களாகிவிட்டன. மூன்று மாதங்கள் கழிந்தன. அப்போது தான் இது ஏதோ மோசமாக விருக்கிறதென்று அவள் மனதிற்பட்டது.

முடிவில் கடிதமும் வராமல் அவனும் வராமல்போகவே நீலாட்சி நகருக்குப் புறப்பட வேண்டியதாயிற்று. அவளிடமிருந்தபணமும், எவ்வளவு சிக்கனமாகச் செலவு செய்தாலும் குறைந்துபோய்விட்டது, நகரத்திற்குவந்த இரண்டொரு நாட்களில் கிழவியைச் சந்தித்தாள். அவள் மூலமாய் அச்சுதன் சுகவிலாசத்தில் போக்குவரத்தாக விருக்கிறானென்றும், ஞானம்பாள், செல்வாம்பாள் இவர்கள் இருவரில் ஒருவரை மணம்புரியக் கருதுகிறானென்றும் கேள்விப்பட்டாள். அவனை நேராய்ச்சந்தித்து அவன் தனக்களித்த சத்தியவாக்குப்படி நடக்கக்கருதுகிறானா இல்லையா வென்பதை இரண்டிலொன்று தீர்மானமாக அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆவலுடையவளாக விருந்தாள்.

ஞானம்பாள் வீட்டிற்கு நீலாட்சி சென்றபோதே செல்வாம்பாள் கூறிய விஷயங்களால் அக்கன்னிகைகள் இருவர்களில் ஒருவருக்கேனும் அச்சுதன்மேல் அன்பேயில்லையென்று அறிந்துகொண்டாள். பிறகு கிழவியிடம் அவள் அவ்வளவு துணிகரத்தோடு பேசியதேனெனில், கிழவியிடம் கொஞ்சம் அஞ்சிப்பேசினால் அவள் மிக்க அக்கிரமமாகப் பொருள்பறிக்கத் துணிந்துவிடுவாள். ஆகையால் அவளிடம் அவ்வாறு தைரியமாகப்பேசினால்தான் அவள் நம்மை விட்டொழிவாளென்று அவ்வாறு கூறினாள். ஆனால் கிழவி அதற்கு அஞ்சாது பேசியமாதிரியால் நீலாட்சியின் கருத்து நிறைவேறவில்லை.

நீலாட்சி கள்ளத்தெருவிற்குச் சென்றுவந்து அகப்பட்ட கடிதங்களைப் பார்த்தபோது, அவள் மனதிற்கு உண்மை விளங்கிவிட்டது. எப்படி யெனில், அச்சுதன் அக்கிழவிக்கு எழுதிய கடிதங்களில் நீலாட்சிக்கு நம்பகம் உண்டாகும்படிக்குத் தன்னைப்பற்றி பேசவேண்டுமென்றும், தான் மிக்க யோக்கியவதி யென்றும் அக்கிரம நடக்கையா யிருந்தால் தான் சற்றும் சம்மதிக்கிறவ ளல்லவென்றும் நீலாக்ஷியின் மனதிற் படும்படி கூறவேண்டுமென்றும், இன்னும் பல விதங்களாக எழுதியிருந்தான். அக்கடிதங்களையெல்லாம் பார்த்தபோது அச்சுதன் ஆரம்பத்திலிருந்தே தன்னை மோசம் செய்யவேண்டுமென்று எண்ணி யிருந்தான் என்று நன்றாய்த் தெரிந்துவிட்டது. அப்போதுதான் அவளுக்கு அவன்மே லிருந்த அன்பு முழுதும் நஞ்சாக மாறிவிட்டது. உடனே அவன்மேல் பூரணமாக வஞ்சம் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள். தான் மனப்பூர்வமாக நம்பியிருந்த ஆடவன் இவ்வாறு ஆதிமுதலே தன்னைக் கற்பழித்தபின் துரோகம்செய்ய எண்ணியிருந்தான் என்று தெரிந்தால் அக்கன்னிகையின் மனம் எத்தகைய வேதனை யடையுமென்பதைப்பற்றி இதைவாசிப்போரே சிந்தித்துக் கொள்ள வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயம் நாம் கூற விரும்புகிறோம். நீலாட்சி இத்தகைய துன்பத்திற்கு ஆளானதன் காரணம் என்னவெனில், கலியாணமாகாத ஒரு கன்னிகை தனியே ஒரு விடத்தில் வசித்துக்கொண்டிருப்பது குற்றமல்ல, ஒழுங்கீன மல்லவென்று கருதுவதும், அவள் அன்னிய வாலிபனோடு சம்பாஷிப்பதும், அவன்கூட உலவச்செல்வதுமாகிய இவை குற்றமல்லவென்றும், அவள் தனியே கடைவீதி முதலிய விடங்களுக்

குச் செல்வது தப்பல்லவென்றும், அவ்வாறெல்லாம் செய்யக்கூடாதென்று தடுப்பது அநாகரீக மென்றும், அப்படிச்செய்வது நமது மாதரை நாம் அடிமைகள்போல் நடத்துவதாகும் என்றும் கருதும் ஆசாரம் உண்டே, அதுவேபாபம் இக்கபடறியாக் கன்னிகைக்கு ஆயுள் முழுமையும் பெருந்தீங்கையும், தீராத்துயரையும் விளைவித்ததாகும்.

நேயர்களே! இத்தகைய திருட்டாந்தங்கள் எண்ணிறந்தன விருக்கவும், நம்நாட்டிற் சிலர் அத்தகைய ஆசாரவழியில் நமது மாதரையும் நடக்கச்செய்வதுதான் நாகரீகச் சீர்திருத்தம் என்று கருதுகிறார்களெனின் அத்தகையோரை எத்தகைய அறிவிலிகளென்று கருதவேண்டும்.

23-வது அத்தியாயம்

"ஆய்ந்தோய்ந்து பாராக்கால் ஆபத்தே நேரிடும்"

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து இரண்டு வாரங்கள் கழிந்தன. ஒருநாள் தேவராஜன் வழக்கம்போல் வரும் வேளைக்கு மிக்க முன்னாடியே வந்துவிட்டான். அவனை யுள்ளே யழைத்துச்சென்ற வேலைக்காரியாகிய இராஜம்மாள், அவன் முகக்குறியால், நம்பிக்கையும், களிப்பும், மனத்துடிப்பும், கூச்சமும் அவன் மனதில் உண்டாகி யிருக்கிறதென்று உணர்ந்தாள். தேவராஜன் கேட்டகேள்விக்கு இராஜம்மாள் அவன் எதிர் பார்த்தபடி செல்லாம்பாள் இல்லையென்றும் ஞானம்பாள் அவனை யுடனே வந்துகாண்பாளென்றும் கூறி முன் அறையில் அவனை யுட்காரவைத்துச் சென்றாள்.

அதன்படியே இரண்டொரு நிமிடங்களில் ஞானம்பாள் தேவராஜன் இருக்கு மறைக்கு வந்தாள். இருவரும்

க்ஷேம சமாசாரத்தைப் பற்றிப் பேசியபின் தேவராஜுடு தான் பேசக் கருதி வந்த விஷயத்தைப்பற்றி மெதுவாக ஆரம்பிக்க முயன்று, "நான் இப்போது அகாலத்தில் வந்ததற்காக உன்னை மன்னுப்பு கேட்டுக்கொள்ள வேண்டியவனுக விருக்கிறேன். ஆனல் நான் ஒரு விஷயத்தைப் பற்றி யுன்னிடம் கூறக்கருதியே வந்தேன். கடவுள் தயவால் அந்த விஷயம் உனக்கும் அப்பிரியமாக இராதென்று நம்புகிறேன்" என்ருன்.

ஞானம்பாள் மனதில் ஏனே ஒருவித உணர்ச்சியும் ஐயமும் உண்டாயிற்று. ஆயினும் அவள் மனதைத் திடப் படுத்திக்கொண்டு "உமது க்ஷேமசங்கதியைப் பற்றிய விஷயம் எதுவாயினும் என் மனதிற்கு விருப்பமாகவே யிருக்கும். நீர் செய்திருக்கும் உதவிகள் நான் மறக்கத் தக்கவையல்ல" என்ருள்.

தேவராஜுடு:— மிக்க வந்தனம். நான் இப்போது வேறு உத்தியோகத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறேன். அதாவது நான் நயனபுரி இராஜசபையில் இருக்கும் நமது நாட்டு மந்திரிக்கு உதவிக் காரியதரிசியாக நியமிக் கப்பட் டிருக்கிறேன். அதனல் வருமானமும் அந்தஸ்தும் உயர்த்தப் பட்டது. நான் அக்கிழவியின் கொலையைப்பற்றிய விசாரணை நடந்த உடனே இதை விட்டு அந்த நாட்டிற்குச் செல்ல வேண்டும். இவ்வாறு என் அந்தஸ்து உயர்த்தப்படாமல் நான்முன் னிருந்த சாதாரண லிகிதன் வேலையிலேயே யிருந்தால் இப்போது கூறக்கருதும் விஷயத்தைக் கூற மாட்டேன். இப்போது நான் உயர்ந்த பதவியையும் கௌரவமான அந்தஸ்தையும் அடையக் கூடிய நிலைமையி லிருப்பதால்தான் என் மனதிலிருப்பதைக் கூறத் துணிந்தேன். அன்று அச்சுதனல் அச்

சங்கதி நடந்தபின் என் விஷயத்தைக் கூறவே நான் வந்தேன். ஆனால் அச்சமயம் கூறுவது யோக்கியதையாகத் தோன்றாதென்று பேசாமலிருந்துவிட்டேன். நான் உன்மேல் கொண்டிருக்கும் காதல் உண்மையும், உறுதியும், சத்தியமும், நியாயமுமானது. உனக்கு என் விருப்பம் பிரியமாயிருக்கிறதென்று ஒரு வார்த்தை கூறினால்......" என்று தடுமாற்றத்தோடு தியங்கினான்.

ஞானம்பாள் :—"நான் உமது மொழிகளைச் சந்தோஷமும் கௌரவமுமாகக் கருதவில்லையென்று கூறினால் அசத்தியம் மொழிந்ததாக முடியும். ஆயினும், இதைப்பற்றி உமது தாயாரைக் கலந்து பேசினால்" என்றதே,

தேவராஜன் :—"ஆ! இப்போது நான் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் உன் உருவமும் நினைப்பும் என் மனதிலிருக்குமாதலால், நான் சந்தோஷத்தோடும் தைரியத்தோடுமே யிருப்பேன். அதனால் தாராளமாக விர்த்தியடைவேன். இந்த வேலைக்கு வந்த உத்திரவைக் கண்டதே நான் என் மனோபாவத்தை யென் தாயாரிடம் ஒளிக்காமல் கூறினேன். என் தாயார் உடனே என் எண்ணத்தை உன்னிடம் அறிவிக்கும்படி கூறினார்கள்" என்றான்.

ஞானம்பாள் :—உமது தாயார் என்னை யறியார்களே.

தேவராஜன் :—"அப்படிக் கருதவேண்டாம். எனது தாயார் உன்னை நேரில் சந்தித்துச் சம்பாஷிக்காவிடினும், உன்னைப் பன்முறை பார்த்திருக்கிறார்கள். உன் குணங்களைப் பற்றி நன்றாயறிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் உன்னை மருகியாகப் பெறுவது என் தாயாருக்கு மிக்க திருப்தியே" என்றான்.

இதன் பின் காதலரிருவரும் சற்று நேரம் பேசிக் கொண் டிருந்தார்கள். கடைசியில் தேவராஜு சென்ற பின் ஞானம்பாள் தன் மன உணர்ச்சிகளை யெல்லாம் அடக்கிக்கொண்டு சாந்தத்தோடு செல்வாம்பா ளிருக்கும் அறைக்குச் சென்றாள்.

ஞானம்பாள் தன் சகோதரியிடம் களங்கமின்றி நடந்த சம்பவங்களைக் கூறியபோது, செல்வாம்பாள், "இதைக் கேட்க நான் சந்தோஷமடைகிறேன். ஏனெனில் தேவராஜுப் பிள்ளை நல்ல பதவிக்கு வரக்கூடிய உத்தியோகத்தைப் பெற்றிருக்கிறார். அதிலிருந்து இன்னும் மேலான அந்தஸ்தைப் பெறலாகும். சீக்கிரத்தில் பிரபுப் பட்டம் பெறக்கூடும்'' என்றாள்.

ஞானம்பாள் :—நான் அப்போது அவற்றை யெல்லாம் சிந்திக்கவில்லை. அவருடைய நல்ல குணங்களையும், நேர்மையான நடக்கையையும், களங்கமற்ற மனதையுமே நான் கருதினேன்.

செல்வாம்பாள் :—"சகோதரியே! உனக்குக் கூற நானும் ஒரு இரகசியம் வைத்துக்கொண் டிருக்கிறேன். எனக்கும் ஒரு கராக்கி வந்தது-'' என்றாள்.

இதைக்கேட்ட ஞானம்பாள் மிக்க வியப்பும் கலவரமு மடைந்து, "செல்வாம்பாள்! அது இன்று நடந்திராது. அப்படியிருந்தும் நீ என்னை நம்பி என்னிடம் இன்னும் கூறாமலே யிருக்கிறாய்.'' என்றாள்.

செல்வாம்பாள் :—"அது நேற்றுதான் நேர்ந்தது. எதற்காவோ, என்ன காரணமோ உனக்கு உடனே கூற எனக்குப் பிரியமில்லாம லிருந்தது. முதலில் சந்தர்ப்பம் வாய்க்கும் போது கூறலாமென்றிருந்தேன்,'' என்றாள்.

ஞானம்பாள் :—ஆனால் வேறு எவ்விதக் காரணத்தாலா

வது அல்லது அகௌரவமென்று கருதியாவது கூற அஞ்சியிருப்பாய் என்று நான் கருதவில்லை.

செல்வாம்பாள் சற்று கோபத்தோடு "சே! ஒரு காலுமில்லை. கனம் கிருஷ்டப்பன் உனக்குத் தெரியாதவரல்லவே." என்றாள்.

ஞானம்பாள் மிக்க வியப்போடு "கனம் கிருஷ்டப்பனு என்றாள்.

செல்வாம்பாள் :—"ஆம். நேற்று அவர் ஆதிமுதலே என் மேல் பூரணமாகக் காதல்கொண் டிருப்பதாய்க் கூறினார். உலகேசம் பிரபுவின் புத்திரன் மந்திரியின் உதவிக் காரியதரிசிக்குக் குறைந்தவ ரல்லவென்று கருதுகிறேன்.

இம்மொழிகள் பெருமையோடும் அகங்காரத்தோடும் கூறப்பட்டவை போல் ஞானம்பாள் மனதிற்குப் புலப்பட்டது. அவள் இரண்டொரு விநாடி மௌனமாக விருந்தபின், "செல்வா! நீ யவரை உண்மையாக நேசிக்கிறாயா?" என்றாள்.

செல்வாம்பாள்:—அப்படித்தான் என் மனதிற்பட் டிருக்கிறது. ஏன் அவர் அழகாக இல்லையா? அங்கங்கள் இலட்சணமாகவே யிருக்கின்றன. அவர் முகத்தில் நல்ல புத்திப் பிரகாச மிருக்கிறதல்லவா!

ஞானம்பாள் :—அவருடைய தந்தை யிதற்குச் சம்மதித்தாரா?

இதைக் கேட்டதே செல்வாம்பாள் சற்று தடுமாற்றமடைந்து பிறகு "சந்தேகமின்றி அவர் தந்தை யொப்புக்கொள்வாரென்று கருதலாகாது. அவர் என்னைக் கண்டதேயில்லை. ஆனால் கல்யாணம் முடிந்து விட்டால் அதன் பிறகு, தான் என்னை யழைத்துக்கொண்டு போனால்

பேசாமல் சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்வார்கள் என்று என் காதலர் உறுதியாகக் கூறுகிறுர்.'' என்ருள்.

இதைக் கேட்டதே ஞானம்பாள் மனதில் திகிலும் துயரமும் உண்டாய் விட்டது. அவள் மிக்க கலவர மடைந்த மனதோடு செல்வாம்பாளை நோக்கி "என்ன? இரகசியமாகக் கலியாணம் செய்து கொள்வதா! கிருஷ்டப்பன் அத்தகைய சங்கதியைத் துணிந்து உன்னிடம் கூறியிருந்தால் நீ யதற்கு ஒருகாலும் சம்மதித்திருக்க மாட்டாயென்று கருதுகிறேன்'' என்ருள்.

செல்வாம்பாள் கோபமடைந்தவள் போல் "நீ யென்ன முகத்தில் இத்தகைய விகாரத்தோடு பேசுகிருயே. பலர் என்னை மணம்புரிய விரும்புவதால், அவர் துரிதமாகத் தன் விஷயத்தை நிச்சயம் செய்துக்கொள்ளக் கருதுவது சுபாவம்தானே. ஒரு பிரபுவின் மகன் என்னை மணம்புரிய விரும்பும்போது நான் சம்மதிப்பதும் இயற்கையே'' என்ருள்.

ஞானம்பாள்:—கனம் கிருஷ்டப்பன் தன் தந்தைக்கு இரண்டாவது புத்திரன். எதற்கும் அவர் தன் தந்தையின் தயவிற்கே காத்துக்கொண் டிருக்கவேண்டியவர். அவருக்கு ஒரு உத்தியோகமு மில்லை.

செல்வா:—ஆனுல் அவர் சீக்கிரம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஒரு அவயவியாகச் செல்வார். அத்தகையோருக்கு மனைவியாக விருப்பதை நான் கௌரவமாகவே மதிக்கிறேன். என்னுடைய யோக்கியதையும் புத்தியும் எனக்குத் தெரியும். உலகேசம் பிரபு என்னை மருமகளாக ஏற்றுக்கொள்வது கௌரவத் தாழ்வென்று சற்றும் கருதமாட்டார். ஒரே வார்த்தையாய்க் கூறி விடுகிறேன். கலியாணம் சீக்கிரம்

நடக்கும் - மிக்க இரகசியமாக—நீ தோழிப் பெண்ணாக விருக்கலாம்.

ஞானம்பாள் பின்னும் திகிலும், வியப்பும், துயரமும், பிரமையு மடைந்து, "ஐயோ கடவுளே! செல்வாம்பா! இவ்வளவுதூரம் அவனோடு விவகாரம் வைத்துக் கொண்டாயா?" என்றாள்.

செல்வாம்பாள் மிக்க துயரமடைந்தவள் போல் "இது அன்பில்லா வார்த்தை. இப்போது நீ உன் சங்கதியைக் கூறியபோது நான் ஏதேனும் மறுத்துக் கூறினேனா?" என்றாள்.

ஞானம்பாள் நிதானமாகவே, "ஆயினும், நான் சற்றும் அவசரப்படவில்லை யென்றும், புத்திதவறி நடந்து கொள்ளவில்லை யென்றும், விவகாரம் தவறி நடக்கவில்லை யென்றும், இரகசியமான நடக்கை யொன்றுமில்லை யென்றும் உன் மனசாட்சியே கூறும். ஓ என் சகோதரியே! இவ்விஷயம் என் மனதிற்கு மிக்க வியாகூலத்தை யுண்டாக்கிவிட்டது. இம்மாதிரி யுன்னிடம் பேசுவதே எனக்கு மிக்க துயரமாக விருக்கிறது. ஆனால் இத்தகைய நம்பகமில்லாததும், உனக்கு க்ஷேமத்தை யளிக்காததுமான விவகாரத்தில் நான் சற்றும் பிரவேசிக்க மாட்டேன்" என்று மொழிந்தாள்.

செல்வாம்பாள் கோபத்தோடு, "அப்படி யாயின் இதைப்பற்றிய பேச்சை யிதோடு நிறுத்திவிடுவோம். நீ எனக்குமேல் பெரியவள்போல் இப்படி யென்னைக் கண்டித்துப் பேசுவது மிகக்கெட்டது. வயதைக் கவனித்தாலும் நானே இரண்டு மூன்று மாதங்கள் உனக்கு மூத்தவள்" என்றாள்.

ஞானம்பாள் தன் கோபம், துயரம், திகில் யாவற்றையும் அடக்கிக்கொண்டு தன்னால் கூடியவரையில் சாந்த

மாகவே நியாயத்தைக் கூறித் தன் சகோதரிக்கு விஷயம் விளங்கும்படி கூறவேண்டு மென்று தனக்குள் சிந்தித்துக் கொண்டு, மெதுவாக அவ்வாறு கூறத்தொடங்கி "இப்போது நீ முன்யோசனை செய்து நடந்துகொள்ளும் மாதிரிப்படித்தான் உன் ஆயுள் பரியந்தம் உன் க்ஷேமம் ஏற்படவேண்டும்" என்றாள்.

செல்வாம்பாள் முகத்தைச் சுளித்துக்கொண்டு மௌனமாக விருந்தாள். ஞானம்பாள் கூறுவது சரியானதென்றும் உண்மையானதென்றும் அவள் மனதிற் பட்டிருக்கலாம். ஆனல் அவள் முரட்டுப் பிடிவாதமும், தன் மனப் போக்கின்படி நடக்கும் சுபாவமும் உடையவள். மேலும் செல்வத்தின் மேலும் உலகபோகங்களை யனுபவிப்பதிலும் ஆவலுள்ளவள். இப்போது கனம் கிருஷ்டப்பனை மணம்புரிந்து கொண்டால் அவையாவும் கிடைக்குமென்று நம்பி யிருக்கிருள். ஆதலின் தன் பிரியப்படி நடக்கவே அவளுக்கு விருப்பம்.

186498
அப்படி யிருந்தும் ஞானம்பாள் உறுதியாகக் கூறியவாற்றல் அவள் மனதில் ஒருவித பீதி யுண்டாய் விட்டது. அதாவது இதைத் தடுத்துவிட்டுத் துணிந்து கிருஷ்டப்பன் தந்தையாகிய உலகேசப்பிரபுவுக்குத் தெரிவித்து விடுவாளோ என்றஞ்சினுள். கடைசியில் முகச்சுளுக்கை யொழித்துவிட்டு ஞானம்பாளை யாலிங்கனம் செய்துகொண்டு "நீ கூறுகிறபடி நன்றாய் ஆலோசித்தே இனி அவ்விஷயத்தில் பிரவேசிப்பேன்" என்றாள்.

ஞானம்பாள் கள்ளங்கபடற்றவள். ஆகையால் தன் சகோதரி தன்னை யேமாற்றிவிட இப்படிப் பாசாங்கு செய்கிருளென்று சற்றேனும் கருதவில்லை. ஆகையால் அவளை யாலிங்கனம் செய்துகொண்டு "நீ அவசரப்பட்டு

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் இவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களேயும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர்; பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புததிமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0   2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தினபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம்வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளேயுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களேப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டு தில்லே. இதில் எல்லா ங்சரகளும் பூரணமா யிருக்கின் வென்று கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0   2-ம்பாகம் ரூ. 2—4-

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதரா

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புதுநாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ...	4	0	தினகரசுந்தரி ரூபா	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	பத்மாஸனி ...	0	14
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
சுவர்ணம்பாள் ...	0	12	கமலசேகரன் ...	1	12
னந்தவிங ...	2	0	பூங்கோதை ...	0	10
தனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ராமகிருஷ்ண பரம ஹம்ஸரு			அமராவதி 2 பாகமும்	4	0
யசரித்திர உபதேசஙகள்	1	12	சகோதரவாஞ்சை	0	6
			லோகநாயகி அச்சில்		

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.